விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 064 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 09 புதன்கிழமை (21.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## உறவுகளால் கிளிநொச்சியில் நீதிக்கான போராட்டம்



03

### மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து

## யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்ட மீனவர்கள்



06

# முள்ளிவாய்க்கால் போருக்கு ஜே.வி.பி ஒத்துழைப்பு

## பகிரங்கமாக ஒப்புக்கொண்ட அநுர குமார

(கொழும்பு)

**தமிழ் மக்களுக்கு எதிரான போருக்கு குறிப்பாக இறுதிக்கட்ட முள்ளிவாய்க்கால் போருக்கு ஜே.வி.பி ஒத்துழைப்பு வழங்கியது என்பதை அநுர குமார திஸாநாயக்க பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளார்.**

கொழும்பிலுள்ள தனியார் இலத்திரனியல் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழர்களுக்கு 15



## மயங்கி விழுந்த ஆசிரியர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் மயங்கி விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

கோண்டாவிலைச் 15



## பரந்தனில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(பூநகரி)

பூநகரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பரந்தன் கிராய் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியானதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி மேற்படி விபத்து சம்பவித் 15

### யாழ்ப்பாணத்தில்

## ஹெரோயினுடன் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நான்கு இளைஞர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15

## காணி விடுவிப்பு தொடர்பில் யாழில் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் காணி விடுவிப்புத் தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

யாழ் இராணுவ கட்டளைத் தளபதிக்கும் 15



## ரணிலுடன் இணைந்து செயற்படுகிறேன்

### சரத் பொன்சேகா

(கொழும்பு)

தாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படுவதாகவும், ஆனால் அது அரசியல் நோக்கற்றது என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் 15

### கிளிநொச்சி இராமநாதபுரத்தில்

## மிளகாய்த்தூள் வீசி ஐவர் மீது வாள்வெட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராமநாதபுரத்தில் ஐவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

குடும்பத்தினருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக மிளகாய்த்தூள் வீசப்பட்டு சரமாரியாக வாள் வெட்டு இடம்பெற் 15

# பிரஜைகளின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்

## இணைய சட்டம் தொடர்பில் அமெரிக்கத் தூதுவர்

(கொழும்பு)

சர்வதேச சமூகம் மட்டுமன்றி நாட்டின் பிரஜைகளின் தேவைகளுக்கு செவிசாய்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டுமென அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கோரிக்கை விடுத்துள்ளார்.

இணையப் பாதுகாப்பு சட்டம் குறித்து கருத்து 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
02 - 12 - 1951



மறைவு
18 - 02 - 2024

## அமிர்தலிங்கம் ஞானேஸ்வரி

கட்டுவன் மேற்கு தெல்லிப்பழையினைப் பிறப்பிடமாகவும் அச்செழு வடக்கு நீர்வேலியினை வதிவிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் ஞானேஸ்வரி அவர்கள் கடந்த 18.02.2024 (ஞாயிற்றுக் கிழமை) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் அமிர்தலிங்கம் (முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நவரத்தினசோதி மற்றும் இராசகுலசிங்கம் (UK), தர்மகுலசிங்கம் (அகில இலங்கை சமாதான நீதவான், வவுனியா), சிவநேசசிங்கம் (நோர்வே), சதானந்தவதனா, குகானந்தவதனா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற சுப்பையா மற்றும் வனசலோஜினி (UK), விஜியலதா (வவுனியா), பிறேமசாந்தி (நோர்வே), புவனயோகேஸ்வரன் (உடுவில், ஓய்வுபெற்ற ஊழியர் சீமெந்து கூட்டுஸ்தாபனம்), ஸ்ரீகரன் (மீசாலை, ஆசிரியர் - யாழ். இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற ஈஸ்வரலிங்கம் மற்றும் அற்புதலிங்கம், நவரட்னலிங்கம் (சுன்னாகம்), ஜெகதீஸ்வரி (சுன்னாகம்), ரதீஸ்வரி (அச்செழு) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அஜந்தா (நோர்வே), பிரதீபா (கனடா), துஸ்யந்தன் (அவுஸ்ரேலியா), ருஜாந்தன் (இ.போ.ச கோண்டாவில்), தர்சிகா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விக்னேஸ்வரன் (நோர்வே), சுதர்சன் (கனடா), பிரதீபா (ஆசிரியை - கிளி/இந்துக்கல்லூரி), டுபேந்திரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் லக்சிகா, திவாரகா, லக்சனா, விஸ்னுஜன், விபுஜன், விதுர்சன், ரக்ஷிகன், சஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.02.2024) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்செழு இந்து பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

அச்செழு வடக்கு,
நீர்வேலி.
077 698 8996
(19199)

# இலஞ்சம் வாங்கிய 2 அதிகாரிகள் கைது

(கொழும்பு)

நுவரெலியா வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஒருவரும் முகாமைத்துவ உதவியாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் அந்த அதிகாரிகள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

பஸ் உரிமையாளர் ஒருவரின் வீதி அனுமதிப்பத்திரத்தை மாற்றுவதற்காக 30,000 ரூபா லஞ்சம் பெற்ற சம்பவம் தொடர்பில் இவர்கள் கைது செயயப்பட்டுள்ளனர். (ம-7)



## ஸ்ரீமுதலி (மனோன்மணி) அம்பாள் ஆலயம்
## ஆலய கட்டுமானப் பணி அறிவித்தல்

கடந்த 11.09.2023 இல் பாலஸ்தாபனம் செய்யப்பெற்ற புலோலி கிழக்கு சந்தாதோட்டம் ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலயத்தில் மூலஸ்தானம் மற்றும் அர்த்தமண்டபம் என்பன வடிவமைக்கப்படவுள்ளன. எனவே கட்டடத் தொழில் அனுபவமுடைய வல்லுநர்களும் இத் தொழிலில் தகுதி உடையவர்களும் எதிர்வரும் 28.02.2024 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

க.ராகீஷ்வரன்
தலைவர்
ஸ்ரீமுதலி (மனோன்மணி)
அம்பாள் ஆலயம்
சந்தாதோட்டம்,
புலோலி கிழக்கு, புலோலி.

தொடர்பு :
077 784 6126

(19189)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்




அமரர்

## திருநாவுக்கரசு கார்த்திகேயன்

(கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - பருத்தித்துறை)

கடந்த 23.01.2024 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நாளை ( 22.02.2024 )வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம். இந் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம். )

மேலும் அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து இறுதிக் கிரியைகளில் நேரில் பங்குபற்றியவர்களுக்கும் தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாக அனுதாப செய்திகள் மற்றும் ஆறுதல் வார்த்தைகள் தெரிவித்த அனைவருக்கும் மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பதாதைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் ஊடாக எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினர், அகில இலங்கை இளங்கோ கழகம் மற்றும் அனைத்து நல்லுறவுகளுக்கும் நேரிலும் பல்வேறு வழிகளிலும் உதவி, ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

ஓம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.
(19198)

# கண்ணீர் அஞ்சலி



## ஞானசம்பந்தர் மில்ரன்

( யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை ஆசிரியர் )

பிறப்பு : 18.02.1992
இறப்பு : 20.02.2024

அவர்கள் நேற்று 20.02.2024 அன்று இறைபதமடைந்து விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட ஆணையாளர்,
உதவி மாவட்ட ஆணையாளர்கள்,
நிர்வாக உத்தியோகத்தர்
மற்றும் ஊழியர்கள்
சென் ஜோன் அம்புலன்ஸ் - யாழ். மாவட்டம்.

( 19197 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட நீதிக்கான போராட்டம்

## பௌத்த பிக்குவும் பங்கேற்பு

(சாவகச்சேரி)

வடக்கு-கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டத்தின் 7ஆம் ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை காலை கிளிநொச்சியில் அடையாள பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.







வடக்கு- கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மேற்படி பேரணியானது காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பித்து மு.ப 11.30மணிக்கு கிளிநொச்சி டிப்போ சந்தியில் நிறைவடைந்திருந்தது.

இதில் பிக்கு உட்பட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்,சிவில் சமூக அமைப்புக்கள்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-30-100-316)

## ஆசிரியர் வெற்றிடங்களை 2 வாரங்களுக்குள் நிரப்பலாம்

### கல்வி அமைச்சர் சுசில்



(கொழும்பு)

அடுத்த இரண்டு வாரங்களுக்கு ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் 10 மாத கால தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் ஆட்சேர்ப்பை நிறுத்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு வாரங்களில் நீதிமன்ற தீர்ப்பு கிடைத்தால். ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியும்" என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார். (நி-5)

## முரண்பாடுகளை தோற்றுவிப்பது அரசியல்வாதிகளே

### ஸ்ரீ சுமங்கல நஹிமியன் தேரர்

(கொழும்பு)

இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்துவது அரசியல்வாதி களே என மல்வத்து பிரிவின் பிரதம தலைவர் திப்பட்டுவே ஸ்ரீ சுமங்கல நஹிமியன் தேரர் தெரிவித்துள்ளார்.

உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக் கத்திற்கான ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் குழுவை சந்தித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில் நல்லிணக்கத்துடன் வாழ்ந்த மக்கள் மத்தியில் இன, மத முரண்பாடுகளை உருவாக்க பேராசை பிடித்த அரசியல் வாதிகள் முனைப்பு காட்டினர்.

மேலும் "தேசிய ஒற்றுமையை உருவாக்க பல விடயங்களைச் செய்யும் போது, இந்த அரசியல் வாதிகள் இவற்றை அழிக்கிறார்கள். ஒற்றுமையை அழிக்கிறார்கள்.

இன்று மரத்துடனும் கல்லுடனும் பேசுவது போல் உள்ளது. அது பரவா யில்லை.இப்போது நிறைவேற்று ஜனாதிபதி பதவியை ஒழிக்க வேண்டும் என்று பேசுகின்றனர். இவர்கள் எப்போதும் மக்களை ஏமாற்றுகிறார்கள்.

வாக்குகளுக்காகக் காத்திருந்து நாட்டை அபிவிருத்தி செய்வதில் நம்பிக்கை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

## செய்தித்துளிகள்

### மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று சற்று வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 79.13 அமெரிக்க டொலராக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 83.56 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 1.557 அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது. (நி-5)

### குளவிக் கொட்டுக்கு இலக்கான 76 மாணவர்கள் வைத்தியசாலையில்

(பதுளை)

பசறைப் பகுதியில் உள்ள பாடசாலையொன்றின் மாணவர்கள் குளவி கொட்டுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பசறை நகரில் உள்ள பொது விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகளில் மாணவர்கள் நேற்று பங்கேற்றிருந்த போது, இந்த அனர்த்தத்திற்கு முகங்கொடுத்துள்ளனர்.

இதன்போது, குளவிக் கொட்டுக்கு இலக்கான 76 மாணவர்கள் பசறை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

### வனப்பகுதிக்குள் நுழைந்தால் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

"அனுமதியின்றி வனப் பகுதிகளுக்குள் பிரவேசிப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என வனப்பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் நாயகம் நிஷாந்த எதிரிசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "வனப்பகுதிகளில் இடம்பெறும் தீப்பரவல் சம்பவங்கள் காரணமாக, அனுமதியின்றி வனப்பகுதிகளுக்குள் பிரவேசிப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அண்மைக்காலமாக நிலவும் அதிக வெப்பத்துடனான காலநிலை காரணமாக கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை ஆகிய பகுதிகளில் உள்ள வனங்களில் தீப்பரவல் ஏற்பட்டு வருகின்றது" எனவும் தெரிவித்தார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியல் 2ஆவது இடத்திற்கு முன்னேறிய இந்தியா




இங்கிலாந்துக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியில் 434 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி இமாலய வெற்றியை பதிவு செய்தது. இதனை அடுத்து, உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் 3 ஆவது இடத்திலிருந்து 2 ஆவது இடத்திற்கு இந்திய அணி முன்னேறியுள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3ஆவது டெஸ்ட் போட்டி பெப்ரவரி 15 ஆம் திகதி ராஜ்கோட் மைதானத்தில் நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கப்டன் ரோகித் சர்மா பட்டிங் தேர்வு செய்தார். அதன்படி முதலில் பட்டிங் செய்த இந்திய அணி 445 ரன்களை எடுத்தது.

இதைத்தொடர்ந்து பட்டிங் செய்த இங்கிலாந்து அணி 319 ரன்கள் எடுத்து ஓல்அவுட் ஆனது. இதை தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸ் தொடங்கியது. பட்டிங் செய்த இந்திய அணி 4 விக்கெட்கள் இழப்பிற்கு 430 ரன்களை எடுத்து டிக்ளேர் செய்தது. இதை தொடர்ந்து 557 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி 122 ரன்களில் ஆட்டமிழந்தது.

இதன் மூலம், டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் தனது மிகப்பெரிய வெற்றியை இப்போட்டியில் இந்திய அணி பதிவு செய்துள்ளது.


இதற்கு முன்பு 2021 ஆம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், 372 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதே மிகப்பெரிய வெற்றியாக இருந்தது. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளி பட்டியல்:

1ஆம் இடத்தில் நியூசிலாந்து, 2ஆம் இடத்தில் இந்தியா, 3ஆம் இடத்தில் அவுஸ்திரேலியா, 4ஆம் இடத்தில் வங்கதேசம், 5ஆம் இடத்தில் பாகிஸ்தான், 6 ஆம் இடத்தில் மேற்கிந்திய அணி, 7ஆம் இடத்தில் தென்ஆபிரிக்கா, 8ஆம் இடத்தில் இங்கிலாந்து, 9ஆம் இடத்தில் இலங்கையும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3045

### சங்கர்

தவறி விழுந்த விதையே முளைக்கும் போது...



தடுமாறி விழுந்த நம் வாழ்க்கை மட்டும் சிறக்காதா...? நம்பிக்கையோடு எழுவோம்...

### அபி


சின்ன வயசா இருக்கும் போது ஏழைகளுக்கு உதவி பண்ணனும்னு நினைச்சேன்...



வளர்ந்த அப்புறம் தான் தெரிஞ்சது அந்த ஏழையே நான் தான் என்று...

### கௌரி

வீட்டில டிவி ஓடும் போது டிவி'யை பார்க்கிறவங்கள விட



டிவி'ய ஓட விட்டுட்டு செல்போன் பாக்குறவங்க தான் அதிகம்...

### கிருஷா

மாணவனே... வாடகை வீட்டுக்கும் சொந்த வீட்டுக்கும் என்ன வித்தியாசம்... சொல்...



மாதா மாதம் வாடகை குடுத்தா வாடகை வீடு சார்... ஒவ்வொரு மாதமும் தவணை கட்டுனா சொந்த வீடு சார்...

### வசந்தன்

கடவுள் ஒரு கதவை மூடினா இன்னொரு கதவை திறப்பாராம்...



எனக்கெல்லாம் எல்லா கதவையும் மூடிட்டு சாவிய தொலைச்சிட்டாரு போல...

### நிலா

பிரச்சினையை தாங்கக்கூடிய சக்தியை கொடுக்காட்டியும் பரவாயில்லை...



அட்வைஸ் பண்ண மட்டும் ஆள் அனுப்பாதே கடவுளே...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி இந்தியாவில் ஆரம்பமான நடைபவனி



(சென்னை)

இலங்கை நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று காலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி மூன்று நாள் நடை பயணத்தை ஆரம்பித்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க சென்று கடந்த 4 ஆம் திகதி இலங்கை கடற்படையால் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்யப்பட்ட 23 மீனவர்களின் வழக்கு கடந்த 16 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

அப்போது வழக்கை விசாரித்த நீதிபதி, மீனவர்கள் 20 பேரை விடுதலை செய்ததுடன் அதிலிருந்து இரண்டு மீன்பிடி விசைப்படகின் ஓட்டுநருக்கு ஆறு மாத சிறைத் தண்டனையும் ஒருவர் இரண்டாவது முறையாக இலங்கை கடற்படையால் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளதால் ஓராண்டு சிறைத்தண்டனையும் விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

இந்நிலையில், இலங்கை நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து இராமேஸ்வரம் மீனவர்கள், கடந்த நான்கு நாட்களாக தொடர்வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் நேற்று காலை 9 மணி அளவில் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகம் அருகே உள்ள மீன்பிடி அனுமதி சீட்டு வழங்கும் அலுவலகத்தில் இருந்து சுமார் 600 இற்கும் மேற்பட்ட மீனவர்கள், அனைத்துக் கட்சியினர் மற்றும் பல்வேறு அமைப்பினர் இணைந்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்நோக்கிமூன்று நாள் நடை பயணத்தை தொடங்கினர். (நி-5-6)

# மீண்டும் போராட்டத்தை முன்னெடுக்க இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானம்

(கொழும்பு)

ஆசிரியர் - அதிபர் சங்கங்கள், சம்பள முரண்பாட்டை களைய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "ஆசிரியர் -அதிபர் பதவி உயர்வுகள் தொடர்பாக எந்த வேலைத் திட்டமும் இல்லை. அவர்கள் கடும் நெருக்கடியில் உள்ளனர். ஆசிரியர் பதவியில் இருந்து அதிபர் வரை செல்லும் போது சம்பளம் குறைக்கப்படுகிறது. ஒட்டுமொத்த கல்வி முறை பிரச்சினைகள் குறித்து கல்வி அதிகாரிகள் கவனம் செலுத்துவது இல்லை.

எனவே இவ்வாறான காரணங்களை வலியுறுத்தியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது" என அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# திருப்திகரமான முறையில் மின்கட்டணம் குறைக்கப்படும்

## மின்சாரத்துறை அமைச்சர் உறுதி

(கொழும்பு)

சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் மின்கட்டணம் குறைக்கப்படும் என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (நி-5-6)


வாணி ரெக்ஸ்

விசேட விலைக் கழிவுகள்

வேக்கிங் விசா/ விசிற்றிங் விசா மூலம் கனடா அல்லது ஏனைய வெளிநாடுகளுக்கு செல்வபவரா நீங்கள் அந்த நாட்டு காலநிலைக்கேற்றதான அனைத்து விதமான...



+ Jacket (ஆண்/பெண்/சிறுவர்கள்)
+ Sweatter வகைகள்
+ Cap/மௌள்ளர் வகைகள்
+ பிளாங்கற் வகைகள்
+ Luggage Bag அனைத்து அளவுகள்
+ கை குளோஸ்
+ Ear மௌள்ளர்
+ உள் T.Shirt
+ Neck மௌள்ளர்
+ பெலிட்

மேலும் ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடைகள் மற்றும் நுளம்பு வலை போன்றவை அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்

(C-8358)

வாணி ரெக்ஸ்

No-81, Grand Bazaar Jaffna,

021 222 5578 / 021 222 9286 / 077 748 8093


# இராசிபலன்

21.02.2024
மாசி 09, புதன்கிழமை
துவாதசி பிற்பகல் 1.52 மணிவரை

புனர்பூசம் பின்னிரவு 4.30 மணிவரை
சுபநேரம் 5.01-6.31 மணிவரை
இராகுகாலம் 12.31-2.01 மணிவரை

பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்
அனுசம், கேட்டை

வள்ளவன்

**மேஷம்** — வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** — தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், கொடுக்கல் -வாங்கல்களில் கவனம் தேவை, செயற்பாடுகளில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**துலாம்** — குடும்பத்தவர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** — சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்களால் நன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** — தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** — தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** — பொதுவாழ்வில் புகழ் கூடும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**கும்பம்** — மறைமுகப் போட்டிகள் மாறும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்** — வழிபாடு காரிய வெற்றி தரும், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி** — செல்வ நிலை உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** — எதையும் சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், தொழில் போட்டிகள் கூடும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்** — பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

தோல்வி என்பது மீண்டும் துவங்க ஒரு வாய்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து துணைத்தூதரகத்தை முற்றுகையிட்ட மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

**இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க வலியுறுத்தி யாழ்.இந்திய துணைத்தூதரகத்தை முற்றுகையிட்டு மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



யாழில் உள்ள பல்வேறு மீனவ சங்கங்கள் இணைந்து நேற்று குறித்த போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். இந்நிலையில் பாதுகாப்பு கருதி அதிகளவான பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

மகஜர் கையளிப்பதற்காக மீனவ சங்கப் பிரதிநிதிகள் 7 பேர் தூதரகத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது இந்தியா-இலங்கை அரசுகளுக்கு எதிராக பல்வேறு கோஷங்கள் எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்திய இழுவைப்படகு உரிமையாளர்களே எங்களையும் வாழவிடு, கடற்றொழிலாளர்களை பிரித்தாலும் தந்திரத்தை செய்யாதே, தொப்புள்கொடி உறவுகளை பிரிக்காதே, இந்திய அரசே இலங்கையின் வடபகுதியை திரும்பிப் பார், இந்திய மீனவர்களின் அராஜகம் அடியோடு ஒழிய வேண்டும், வடக்கு மீனவர்களின் வளங்களை சூறையாடாதே போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களை வழிமறித்து பொலிஸார் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து யாழ்.மாவட்ட கடற்றொழில் அமைச்சுக்கு முன்பாக சென்ற மீனவர்கள் அங்கு கோஷங்களை எழுப்பி போராட்டத்தை முன்னெடுத்திருந்ததுடன் கடற்றொழில் அமைச்சருக்கான மகஜர் ஒன்று கடற்றொழில் அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# பாதுகாப்பற்ற நிலையில் 33 புகையிரதக் கடவைகள்

## அச்சத்துடன் பயணிக்கும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழில் 33 புகையிரதக் கடவைகள் பாதுகாப்பு அற்ற நிலையில் காணப்படுவதால் பயணிக்கும் மக்கள் அச்சத்துக்குள்ளாகியுள்ளனர்.

யாழிற்கு கடந்த மாதம் ஜனாதிபதி விஜயம் மேற்கொண்டு, மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்ட போது, 33 பாதுகாப்பு அற்ற கடவைகளையும் பாதுகாப்பான கடவையாக மாற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த வருடத்திற்குள் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் புகையிரத திணைக்களத்திடம் மதிப்பீட்டு அறிக்கைகளும் ஜனாதிபதியால் கோரப்பட்டன.

கடந்த வாரம் இணுவில் பகுதியில் வான் ஒன்று புகையிரதத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் வானில் பயணித்த மூன்று மாத குழந்தையும் தந்தையும் உயிரிழந்த நிலையில் தாய் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்வாறான பாதுகாப்பற்ற கடவைகளால் இந்நிலையில் பயணிப்போர் மிகுந்த அச்சத்துடன் சென்று வருகின்றனர். (நி-5-6-33)



புதிய யாழ்.பாதுகாப்புப் படைத்தலைமையக தளபதியை யாழ்.மாவட்டச் செயலாளர், ஜனாதிபதியின் வடமாகாண மேலதிக செயலாளர் ஆகியோர் அண்மையில் பாதுகாப்புப் படைத்தலைமையகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். (படம்: சிவசாந்தன்)

# பல குற்றச் செயல்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்த நபர் கைது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் பெண்ணொருவர் மீது வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்ட குற்றச்சாட்டிலும் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்பில் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் மத்தி பகுதியை சேர்ந்த பெண்ணொருவர் மீது நேற்று முன்தினம் வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் காயமடைந்த பெண்ணை அயலவர்கள் மீட்டு, சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். இந்நிலையில் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டவரை கைது செய்துள்ளனர்.


கைது செய்யப்பட்டவரை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், குறித்த நபர் யாழில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர் என தெரியவந்துள்ளது. (நி-5-6-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 200 | 330 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 140 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 600 | 700 | 600 | 700 | 560 |
| தக்காளி | 600 | 600 | 600 | 800 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 150 | 200 | 130 |
| கோவா | 400 | 450 | 400 | 500 | 550 |
| கரட் | 800 | 500 | 600 | 600 | 600 |
| பூசணி | 220 | 280 | 250 | 300 | 210 |
| புடோல் | 200 | 150 | 200 | 200 | 180 |
| வாழைக்காய் | 200 | 250 | 220 | 250 | 210 |
| சின்ன வெங்காயம் | 200 | 350. | 300 | 300 | 250-350 |
| பெரிய வெங்காயம் | 380 | 450 | 400 | 500 | 350-480 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 400 | 350 | 250 | 500 | 320 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 160 | 160 |
| பயற்றங்காய் | 200 | 250 | 280 | 400 | 330 |
| லீக்ஸ் | 400 | 400 | 450 | 450 | 500 |
| பீற்றூட் | 250 | 250 | 350 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 800 | 900 |
| முருங்கைக்காய் | -- | 1700 | 1200 | 1200 | 1450 |
| போஞ்சி | 350 | 400 | 450 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 300 | 180 | -- |
| கீரை - 1 பிடி | 60 | 100 | 80 | 50 | 30-70 |
| தேசிக்காய் | 150 | 300 | 250 | 200 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 70-100 | 50-110 |
| இராசவள்ளி | 300 | 400 | 350 | 400 | 450 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 200 | 300 | 150 |
| முள்ளங்கி | 100 | 150 | 160 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 60 | 120 |
| வல்லாரை | 60 | 250 | 50 | 80 | 70 |
| [illegible] | 100 | 100 | 120 | 200 | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம் கிடைக்காத நிலையில் நிறுத்தப்பட்ட அகழ்வுப் பணி



(நெளுக்குளம்)

விடுதலைப்புலிகள் தங்கம் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற உத்தரவிற்கு அமைய இரண்டாவது நாளாக நேற்றும் தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போதும் எதுவும் கிடைக்காத நிலையில் அகழ்வு பணிகள் நிறைவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

குறித்த காணியில் ஏற்கனவே சிலர் சட்டவிரோதமான முறையில் தோண்ட முற்பட்டு தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் குறித்த காணியில் பரல் கணக்கில் விடுதலைப்புலிகள் தங்கத்தினை புதைத்து வைத்துள்ளதாக நம்பத் தகுத்த நபர் ஒருவர் தெரிவித்த கருத்திற்கு அமைய தருமபுரம் பொலிஸாரால் நீதிமன்றில் அனுமதி பெறப்பட்டு தோண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தபோதும் அரைக்கும் ஆலையின் கட்டடத்திற்குள் ஒரு பகுதி சுமார் 6 அடிக்கு மேல் தோண்டப்பட்ட போதும் எதுவும் கிடைக்கவில்லை. இதனை விட காணியின் பின்பக்கத்தில் இரு இடங்களில் கனரக இயந்திரம் கொண்டு நிலத்தில் சுமார் 10 அடிவரை தோண்டப் பட்ட போதும் எதுவும் காணாத நிலையில் குறித்த பகுதிகளை மூட பணிக்கப்பட்டுள்ளது.

(நி-5-6-299-316)

# சவாரி திடலில் பறிபோன மோ.சைக்கிள் மீட்பு

## மூவர் கைது

(நெளுக்குளம்)

மாட்டுவண்டி சவாரியில் களவு போன மோட்டார் சைக் கிள் மீட்கப்பட்டதுடன் மூவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். முல்லைத்தீவு விசுவமடு தொட்டியடி சவாரி திடலில் மாட்டு வண்டி சவாரி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் ஏராளமானோர் கலந்து கொண்டிருந் தனர். இதன்போதே வட்டக்கச் சியில் இருந்து குறித்த நிகழ்வை பார்வையிட வந்த ஒருவரின் மோட்டார் சைக்கிள் களவு போனதையடுத்து சம்பந்தப்பட்டவரினால் புதுக்குடியிருப்பு பொலிஸில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டது.

வழங்கப்பட்ட முறைப் பாட்டிற்கமைய புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெரத் தலைமையிலான குழு சம்பவத்துடன் தொடர் புடைய மூவரினை கைது செய்துள்ளதுடன் மோட் டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது. (நி-5-6-299)

# நடேஷர் அபிஷேகமும் மாசிமகமும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கனை ப்பாய் அருள்மிகு கனகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலய மற்றும் கண்ணகி அம்மன் ஆலயத்தில் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு பிரதோச விரத விசேட பூஜையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடேசர் அபிஷேகமும் மறுநாள் சனிக்கிழமை பௌர்ணமி உற்சவ நிகழ்வும் காலை 9 மணிக்கு மாசிமகம் நவகுண்ட அபிஷேகமும் மாலை 5.30 மணிக்கு கண்ணகி அம்மனுக்கு லலிதா சகஸ்ரநாம அர்ச்சனையும் இடம்பெறவுள்ளன என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-5-6)

# விரிவுரைகளை துரிதப்படுத்தக் கோரி இசைத்துறை மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் அரங்காற்று, கட்புலக் கலைகள்பீட இசைத்துறையில் 4 ஆம் வருடத்தில் கல்வி கற்க வேண்டிய 3 ஆம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களின் விரிவுரை செயற்பாட்டினை துரிதப்படுத்தக்கோரி வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மாணவர்கள் வாயிற் கதவுகளை மூடி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை நிறுத்தப்பட்டதோடு விரிவுரையாளர்கள், பணியாளர்கள் உட்செல்ல முடியாதவாறு தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டனர்.

இசைத்துறை மாணவர்களின் போராட்டத்தினால் ஏனைய துறை மாணவர்களின் விரிவுரைகள் பாதிக்கப்பட்டதாக விரிவுரையாளர்கள் கவலை தெரிவித்தனர். (நி-5-6-33)

# பழக்கத்தால் பறிபோன மோ.சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

யாழ். இளைஞர் ஒருவருடன் நட்பாக பழகி மோட்டார் சைக் கிளை தென் இலங்கை வாசி ஒருவர் அபகரித்து சென்றுள்ளார். நெல்லியடி பகுதியில் உள்ள கடை ஒன்றில் தென்னிலங்கையை சேர்ந்த இளைஞன் ஒருவர் வேலை செய்து வந்துள்ளார்.

அவருக்கு நெல்லியடியை சேர்ந்த இளைஞனுடன் நட்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 13ஆம் திகதி சாப்பாடு வாங்கி வர என நெல்லியடி இளைஞனின் சுமார் 7 இலட்ச ரூபாய் பெறுமதியான மோட்டார் சைக்கிளை தென்னிலங்கை இளை ஞன் வாங்கிசென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் இளைஞன் திரும்பி வராத மையால் தொலைபேசி ஊடாக தொடர்பு கொள்ள முயற்சித்த போது தொலை பேசி இலக்கம் செயலிழந்தி ருந்ததையடுத்து குறி த்த கடைக்கு சென்று விசாரித்த போதும், இளைஞன் கடைக்கும் வரவில்லை எனத் தெரிய வந்தது.

அதன் பின்னர் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் மோட்டார் சைக்கிளை பறிகொடுத்த இளைஞன் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-33)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
## பகிரங்க ஏல விற்பனை

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் உள்ள பழைய பத்திரிகைகள் மற்றும் பிறிண்டர், போட்டோகொப்பி இயந்திரம், மோட்டர், அலுவலக உபகரணங்கள் என்பன பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன.

**இடம் : உப அலுவலகம், புலோப்பளை, பளை.**
**திகதி : 05.03.2024**
**காலம் : மு.ப 10.00 மணி**

**நிபந்தனைகள்**

- ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துவதுடன் ரூபா 500.00 மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமாக செலுத்த வேண்டும்.
- தெரிவு செய்யப்படும் ஏலதாரர் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத்தொகையின் முழுத்தொகையினையும் செலுத்தி பொருட்களை அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.
- உரிய பொருட்களை பார்வையிட விரும்புவோர் மற்றும் மேலதிக விபரங்களை பெற விரும்புவோர் அலுவலக கடமை நேர நாட்களில் காலை 8.30 முதல் மாலை 4.15 வரை தொடர்புகொள்ளலாம்.
- மேலதிக நிபந்தனைக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

**செயலாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பொருளாதார நெருக்கடியில் மாலைதீவு உதவ முன்வராத துருக்கி மற்றும் சீனா

(மாலே)


மாலைதீவு கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையில், துருக்கி மற்றும் சீனா ஆகிய நாடுகள் உதவ முன்வர வில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

வருமானம் என்பது சுற்று லாத்துறையை சார்ந்தே இருக்கிறது. மாலைதீவில் உள்ள கடற்கரைக்கு இந்தியா உட்பட பிற நாடுகளில் இரு ந்து ஆண்டுதோறும் அதிக மான சுற்றுலாப் பயணிகள் சென்று வருகின்றனர்.

குறிப்பாக இந்தியாவில் இருந்து அதிகமான சுற்றுலா பயணிகள் மாலைதீவுக்கு சுற்றுலாக்களை மேற்கொ ண்டு வருகின்றனர்.

இத்தகைய சூழலில் கட ந்த ஆண்டு முதல் இந்தியா - மாலைதீவு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது. அதாவது மாலைதீவில் கட ந்த ஆண்டு ஜனாதிபதி தேர் தல் நடந்தது.

அதில் பிஎன்பி கட்சியை சேர்ந்த முகமது முய்சு வெற்றி பெற்றார். பின்னர் இந்தி யாவுக்கு எதிரான நிலைப் பாட்டை கொண்டதோடு சீனா ஆதரவாளராகவும் இருந்து வந்தார். இவர் தனது தேர் தல் பிரசாரத்திலேயே தான் வென்றால் மாலைதீவில் உள்ள இந்திய இராணுவ வீரர்களை வெளியேற்று வேன் என்று கூறி பிரசாரம் செய்து வாகை சூடினார்.



அதேபோல் வெற்றி பெற்ற அவர் அங்குள்ள இந்திய இராணுவ வீரர்களை வெளி யேறும்படி கூறினார். மாலை தீவின் சுற்றுலாத்துறையை முடக்கும் வகையில் உள் நோக்கத்துடன் லட்சத்தீவை பிரதமர் மோடி ஆதரிப்பதாக அந்நாட்டு அமைச்சர்கள் கூறியதோடு இந்தியா குறி த்து சர்ச்சை கருத்துகளையும் தெரிவித்தனர்.

இது இந்தியா-மாலைதீவு இடையேயான பிரச்சினையை இன்னும் அதிகப்படுத்தியது. இதனால் கடும் கோபமடைந்த இந்தியர்கள் மாலைதீவு செல் வதற்கான டிக்கெட்டுகளை இரத்து செய்தனர். இதனால் மாலைதீவின் வருமானம் சடுதியாக வீழ்ச்சியடைந் தது.

தற்போது மாலைதீவின் வெளிக் கடன்கள் ஏறக் குறைய 4.038 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளதாகவும் உள் கடன்கள் 2026இல் வரவிரு க்கும் கடன் நெருக்கடியுடன் ஒப்பிடும் அளவை விட அதிக மாக உள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.


இதனால் முய்சு சீனா மற்றும் துருக்கியிடம் நிதி உதவி கேட்டதாகவும் ஆனால் அவர்கள் உதவ முன்வர வில்லை என்றும் சீனா தான் ஏற்கனவே கொடுத்த கடனை திருப்பிக் கேட்பதாகவும் தக வல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ஆப்கானில் கனமழை; மண்ணில் புதைந்து ஐவர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் கிழ க்கில் உள்ள பகுதியொன் றில் பெய்த கனமழையால் நிலச்சரிவு ஏற்பட்டு வீடுகள் மண்ணில் புதைந்ததில் 5 பேர் உயிரிழந்துள்ளதோடு கட்டட இடிபாடுகளில் சுமார் 25 பேர் சிக்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் நூரி ஸ்தான் மாகாணத்தில் உள்ள நூர்கிராம் மாவட்ட மலைப்பகுதியில் ஒரு கிரா



மத்தில் கனமழையால் நிலச் சரிவு ஏற்பட்டது. இதில் 20 இற்கு மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்தன. வீடுகளில் இருந்தவர்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர்.

தகவலறிந்த மீட்புக் குழுவி னர் சம்பவ இடத்திற்குச் சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ள நிலையில் 5 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் 25 பேரைக் காணவில்லை என் றும் மாகாண அதிகாரி ஒரு வர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள நூரிஸ்தான் மாகாணம் பெரும்பாலும் மலை மற்றும் காடுகளால் சூழப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. (நி-5-6)

## காசா மீது இஸ்ரேல் தாக்குதல் 24 மணித்தியாலத்தில் 127 பேர் பலி



(காசா)

24 மணித்தியாலங்க ளில் காசா மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 127 பேர் கொல்லப்பட்டுள் ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காசாவில் உள்ள அனை த்து பணயக்கைதிகளை யும் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்குள் ஹமாஸ் அமைப்பின[illegible] விடுவிக்காவிட்டால் ரஃபா வில் தாக்குதல் நடத்தப் படும் என இஸ்ரேல் எச்சரித் துள்ளது.

காசாவின் தெற்கு பகு திக்குள் தங்களது படை கள் எந்த சந்தர்ப்பத்திலும் நுழையக் கூடுமென எச்சரி த்துள்ள நிலையில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள் ளது.

அதேசமயம் இஸ்ரேலின் தொடர்ச்சியான தாக்குதலி னால் காசாவின் முக்கிய மருத்துவமனையான நாசர் மருத்துவமனையின் செய ற்பாடுகள் முற்றிலுமாக நிறு [illegible] (நி-5-6)

## நான்

## இந்திய

## ஜனாதி

(வோஷிங்ட

அமெரிக்க ஜ

கூட்டணியை

வேட்பாளர் நி

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி யார் என்ற பரபரப்பில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் இங்கே ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற முடிவே பெரும் பேசுபொருளாக அமெரிக் காவின் குடியரசு கட்சியில் நிலவி வருகிறது.

குறிப்பாக குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் நான் தான் என்று டொனால்ட் ட்ரம்ப் மற் றும் நிக்கி ஹாலே இடையே வலுவான போட்டி நிலவி வருகி றது.

இதில் யார் அதற்கான சரியான

## உக்ரைனுக்கு 800 நன்கொடையாக வழ

(ஒட்டாவா)

ஒன்றாரியோவில் உற் பத்தி செய்யப்பட்ட 800 ட்ரோன்கள் உக்ரைனுக்கு நன்கொடையாக வழங்கப் பட உள்ளதாக கனேடிய அரசாங்கம் அறிவித்துள் ளது.

ரஷ்ய படையினருக்கு எதிரான போரில் பயன்படுத் துவதற்காக இந்த ட்ரோன் கள் வழங்கப்பட உள்ளன.

சுமார் 95 மில்லியன் டொலர் பெறுமதியான ட்ரோ ன்கள் இவ்வாறு உக்ரை னுக்கு வழங்கப்பட உள்ள தாக பாதுகாப்பு அமைச்சர [illegible]பிலியர் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன் ஆட்சிக்கு வந்தால் ...யாவுடன் கூட்டணி வைப்பேன்

## ...திபதி வேட்பாளர் நிக்கிஹாலே

(...ங்டன்)

**...க்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றால் இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன் ...யை வலுப்படுத்துவேன் என தனது தேர்தல் பரப்புரையில் ஜனாதிபதி ...ர் நிக்கி ஹாலே தெரிவித்தார்.**

... தேர்வு என்பதை உறுதியாக்கும் வண்ணம் இருவரும் தங்கள் பிரசாரங்களை காரசாரமாக நிகழ்த்தி வருகின்றனர்.

இந்நிலையில், நான் ஜனாதிபதியானால் இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன் கூட்டணியை வலுப்படுத்துவேன் என நிக்கி ஹாலே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நிக்கி ஹாலே மேலும் தெரிவிக்கையில், "டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவானால், பல விடயங்கள் குறித்து நான் கவலைப்படுகிறேன், அவற்றில் ஒன்றுதான் மற்ற நாடுகள் உடனான கூட்டணி" என்றார்.

நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் நேட்டோ உடனான கூட்டணியை மேலும் வலுப்படுத்துவேன் எனத் தெரிவித்தார்.

மேலும் இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான், தென்கொரியா, பிலிப்பைன்ஸ் நாடுகளுடன் உடனான கூட்டணியையும் வலுப்படுத்துவேன். எங்களுடன் அனைவரையும் சேர்த்துக் கொள்வோம். இது அமெரிக்காவிற்கு அதிக நண்பர்களை ஈட்டித் தரும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஆனால் இது டொனால்ட் ட்ரம்ப் இனால் சாத்தியப்படாது என அவரது கொள்கைகள் மற்றும் கருத்துக்களை மேற்கோள் காட்டி நிக்கி ஹாலே கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந்-5-6)



## ...00 ட்ரோன்களை ...வழங்கவுள்ள கனடா



3.5 கிலோகிராம் எடையுடைய இந்த ட்ரோன்கள் புலனாய்வுத் தகவல் திரட்டல் மற்றும் கண்காணிப்பு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைன் படையினருக்கு கூடுதல் எண்ணிக்கையில் ட்ரோன்கள் தேவைப்படுவதாக கனேடிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் தாக்குதலை தொடர்ந்து உக்ரைனுக்கு கனடா தொடர்ச்சியாக பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந்-5-6)

## ஹவுதியின் தாக்குதலால் மூழ்கிய பிரிட்டன் கப்பல்



(சனா)

ஏடன் வளைகுடாவில் தமது தாக்குதலுக்கு இலக்கான பிரிட்டன் கப்பல் கடலில் மூழ்கியுள்ளதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த அமைப்பின் இராணுவ செய்தித் தொடர்பாளர் யாஹ்யா சரியா தெரிவிக்கையில்,

தமது தாக்குதலை அடுத்து கப்பலில் இருந்தவர்கள் கப்பலைக் கைவிட்டதால் தற்போது இந்த கப்பல் பெரும் சேதம் அடைந்து மூழ்கியதாக தெரிவித்துள்ளார்.

முன்னதாக செங்கடலை ஏடன்வளைகுடாவுடன் இணைக்கும் பாப் எல்-மண் டேப் ஜலசந்தி வழியாக பெலிஸ் கொடியுடன் கூடிய இங்கிலாந்து கப்பலான ரூபிமார் சரக்குக் கப்பல் ஹவுதிகளின் தாக்குதலுக்கு உள்ளானதாக ஐக்கிய இராச்சிய கடல்சார் வர்த்தக நடவடிக்கை மையம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந்-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் விளைந்த நெல்லில் ஆசனிக்கு செறிவான பாதிப்பை ஏற்படுத்துமா?



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**


ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியில் இதிலுமா என பலருக்கும் இன்றைய தலைப்பை பார்த்தவுடன் ஏதேதோ சொல்லத் தோன்றும். வெள்ளத்தில் விளைந்த நெல்லையும் புற்றுநோயையும் சம்பந்தப்படுத்தி பல செய்திகள் வருவதனால் அதனைப் பற்றி தேடியதில் கிடைத்ததை அறியத் தருகின்றேன். இது சார்ந்து பல ஆய்வுகளும் நடந்திருக்கின்றன. அவற்றின் முடிவுகளும் வெள்ளத்தில் விளைந்த நெல்லையும் புற்று நோயையும் சம்பந்தப்படுத்தி வெளிக்கொணர்ந்ததால் எமது உறவுகளுக்கும் இதனைப் பற்றி எடுத்துக்கூற வேண்டியதாயிற்று.

புற்றுநோய் தற்போது பரவலாக பலருக்கும் வயது வேறுபாடின்றி. பால் வேறுபாடின்றி வரத் தொடங்கியிருக்கின்றது. இதிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் வழிகளை நாம் ஆரம்பகால இனங்காணலுடன் கடைப்பிடித்தால் இக்கொடிய நோயிலிருந்து தப்பிப்பது சுலபமானது. ஆனால் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பிந்திய நிலையில் பல்கிப் பெருகிய நிலையில் இனங்காணலும் தமது வயது வந்த குடும்ப உறுப்பினர்களுக்கு இருப்பது இருந்தது தெரிந்தும் அலட் சியப்படுத்தலினாலுமே நோய்க்குள் துவள நேரிடுகின்றது. யாருக்கு வேண்டுமானாலும் இந்நோய் வரலாம். அதிலும் மனிதனில் பலவகையான புற்றுநோய்கள் இனங்காணப்பட்டிருக்கின்றன. இதற்கு உரிய மருத்துவ ஆலோசனை அவ்வப்போது பெறப்படுதல் மிகமிக அவசியம். வித்தியாசமான கட்டிகள் அல்லது வித்தியாசமான வலிகள், இரத்தப் போக்கு, உடல்களைத்தல் என எதுவிருந்தாலும் அவசியம் தகுந்த மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவது நல்லது.

வழமையாகவே எமதுடலில் கலங்களின் விருத்தி நடந்து கொண்டேயிருக்கும். அபிரிவிதமான வளர்ச்சியை கலங்கள் அடைந்து ஒழுங்கற்ற முறையில் கட்டுப்பாடற்ற விதத்தில் பல்கிப் பெருகும் போது அது எமது உடலிலுள்ள நோயெதிர்ப்பு சக்திகளை அதன் நிலைகளை தாண்டி தம் பாட்டில் வளரத் தொடங்குவதனையே புற்றுநோய் என இனங் காணுகின்றனர். இதில் எமது உடலிலுள்ள நோயெதிர்ப்பு சக்தியின் தன்மை மற்றும் அளவு புற்றுநோய்க்கலங்கள் உருவாவதனை தடுக்காது போகும் நிலையெய்தும் போது பிரச்சினை விபரீதமாகி விடுகின்றது. புற்றுநோய் இனங்காணப்பட்டவர்கள் அனுபவிக்கும் வேதனை சொல்லிலடங்காது. உடல் வலியை பிட உள வலி மிகவும் பெரிது. அதிலும் புற்றுநோயில் அவதிப்படுபவர்களை கவனிக்கும் உறவுகள் அடையும் வலியை எதிலும் விபரிக்க முடியாது. ஒட்டுமொத்தத்தில் ஒரு குடும்பத்தின் அத்திபாரத்தையே ஆட்டங் காண வைக்கும் கொடிய நோயாகவே புற்று நோயைக் காணலாம்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...

அண்மையில் வெள்ளத்தில் அருவி வெட்டி நெல் மணிகளை காப்பற் றோட்டுகளில் காய வைத்தது பற்றி செய்திகளைப் பார்த்தோம். காலந்தப்பி கால நிலை மாற்றத்தின் வெளிப்பாடாக அறுவடைக் காலத்தில் மழை பெய்யும் போது வெள்ளருவி வெட்டு என வெட்டி அவற்றை காயவைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு எமது விவசாயிகள் தள்ளப்பட்டு விட்டார்கள். குறிப்பாக பூநகரிப் பிரதேசத்தில் பூநகரியிலிருந்து பரந்தன் செல்லும் பாதைகளில் விவசாயப் பெருமக்கள் அறுவடை செய்த நெல்லை காயவைத்ததைக் கண்டோம். விவசாய பெருமக்களுக்கு இவ்வாறு நெல்லை காயவைப்பதற்கான பிரத்தியேகமான இடங்கள் என்று எதுவுமில்லை. அதனால் அவர்களுக்கு நனைந்த நெல்லை காயவைப்பதற்கு வயல்களுக்கு அண்மையிலுள்ள பாதைகளிலேயே



அறுவடை செய்தவற்றை விரைந்து காய வைத்தெடுத்தனர். ஆனால் இவ்வாறு பாதைகளில் காயவைத்த நெல்லை அரிசியாக்கி உணவாகக் கொண்டால் அதனை உண்பவர்களுக்கு புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகமென செய்தியொன்று ஊசலாடுகின்றது. இது உண்மையா என ஆய்வுக்குட்படுத்தி பார்க்க வேண்டும்.

ஆசனிக்கு எனப்படும் வேதியியல் பொருள் இயற்கையாகவே சூழலில் காணப்படும் ஒன்றாகும். இயற்கையில் அசேதன ஆசனிக்காக இருக்கும் போது அதில் நச்சுத்தன்மை அதிகமாக காணப்படும். காலநிலை மாறி அதிகரித்த மழை வீழ்ச்சியில் வயல் நிலங்கள் வெள்ளக்காடாகவே இருக்கும் போது வெள்ளத்தில் வளர்ந்த நெல்லில் மண்ணினுள் பிடித்து வைக்கப்பட அசேதன ஆசனிக்கு விடுபட்டு தாவரங்களால் அகத்துறிஞ்சுவதற்காக இலகுவாக கிடைத்து விடும். இதன் காரணமாக அசேதன ஆசனிக்கு அதிகளவில் நெல் மணிகளில் குறிப்பாக தவிடு பகுதியில் செறிவாகிவிடும். குத்தரிசியில் நெல்லை அவித்த பின்னர் அதனை குற்றும் போது தவிடு தனியாக பிரிக்கப்படுவதனால் செறிவாகியிருக்கும். ஆசனிக்கு தவிட்டுடன் அகற்றப்படுவதனால் குத்தரிசியில் இந்தப் பிரச்சினை மிக மிக குறைவு என கூறப்பட்டுள்ளது. என்றாலும் நாம் ஆசனிக்கு என்னும் வேதியியல் பொருளினால் எமது உணவில் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது முக்கியமானதாகும்.

நெல்லினை குற்றி பெறப்படும் அரிசி நன்றாக வேக வேண்டும். இவ்வாறான நெல்லினை அரை குறையாக வேக வைத்து பெறப்படும் சோற்றை உண்பவர்களுக்கு புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் வெள்ளத்தில் வளர்ந்த நெல்லில் காணப்படும் ஆசனிக்கு எனப்படும் வேதியியல் பொருள் இரவு முழுவதும் நெல்லை ஊறவைத்து மறுநாள் அதனை அவித்து குற்றும் போது அதிகளவில் (கிட்டத்தட்ட 80சதவீதமான) வெளியேற்றப்பட்டு விடும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நடைமுறையை எம்மவர்கள் காலங் காலமாக செய்து வருவதனால் ஆசனிக்கு எனப்படும் வேதியியல் பொருளின் பாதிப்பு எமக்கு அநேகமாக இல்லாமலேயே இருந்திருக்கின்றது. இதனை ஆய்வு ரீதியாக செய்து தற்போது குத்தரிசியினை நன்றாக வேக வைத்து சோறாக்கி உணவாக்கினால் பிரச்சினையேதும் இல்லையென கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

எம்மவர்கள் வெள்ளை அரிசி சோற்றை விட குத்தரிசியில் நாட்டங் கொண்டதற்கான காரணம் இது வென்பதும் இதன் மூலமாக எளிதில் நெல்லிலேற்படக் கூடிய நச்சுத்தன்மை அகற்றப்பட காரணமாக இருப்பதனையும் பாருங்கள். தவிடு அகற்றப்படும் அதேநேரத்தில் இரவில் ஊற வைத்து மறுநாள் அவித்து காய வைத்து குற்றியெடுக்கும் குத்தரிசியின் மகத்துவம் இன்னும் பெறுமதி சேர்ந்ததாக மாறியிருக்கின்றது.

# இன்று ஒரு தகவல் 43



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## புத்தகம்

சில பேரு புத்தகம் எழுதினா அதுக்குப் பரிசு கொடுக்கலாம் போல தோணும்! சிலபேரு புத்தகம் எழுதாம இருந்தா அவருக்கு ஏதாவது பரிசு கொடுக்கலாம் போல தோணும்!

ஒரு நல்ல புத்தகம் அறிவை வளர்க்கணும். படிக்கப் படிக்க அறிவு வளரும். அறிவு வளர வளர பண்பாடு வளருமுன்னு சொன்னார் ஒரு பெரியவர்.

புத்தக வாரம் என்று கொண்டாடுறாங்களே எதுக்காக?

புத்தக வியாபாரம் பெருகணும் என்கிறதுக்காகவா? அது மட்டும் நோக்கமில்லை!

படிக்கிற பழக்கம் நிறைய பேருக்கு வரணும். நல்ல நூல்களைப் படிக்கணும்.

படிப்பிலேயிருந்து அறிவு. அறிவிலே இருந்த் பண்பாடு அப்படிப் போகணும்.

படிச்சவங்களையெல்லாம் அறிவாளிகள் என்று ஒத்துக்க முடியாது. அறிவாளிகளை எல்லாம் பண்பாட்டிலே உயர்ந்தவங்கள் என்று ஒத்துக்க முடியாது.

அப்பாவிகளை விட அறிவாளிகள் ஆபத்தானவர்கள் என்று சொன்னார் ஒருத்தர். அறிவாளிகள் அறிவை தவறான வழிக்குப் பயன்படுத்தினால் அதனாலே உண்டாகிற ஆபத்து அதிகம்.

சிலபேரு அறிவை பயன்படுத்தி என்ன செஞ்சிகிட்டு இருக்காங்க தெரியுமா?

மிக நவீனமான வெடிகுண்டுகள் தயார் பண்றாங்க!

இது என்னத்துக்கு? சண்டை போடுறதுக்குத் தானே என்ற கேட்டா இல்லை. சமாதானத்துக்காக என்று சொல்றாங்கள்!

ஐக்கிய நாடுகள் சபையிலே ஆயுதத்தடை நிலையம் ஒன்று இருக்கு. அங்கே இருந்த பெரிய டாக்டர் பைசண்ட் படேல் என்ன சொன்னாரு தெரியுமா?

ஒரு போர் விமானம் தயார் பண்றதுக்கு 50 கோடி டொலர் பணம் செலவாகுது. இந்தப் பணத்தை உலக நலவாழ்வு ஸ்தானத்துக்கிட்டே கொடுத்தா இந்த உலகத்திலே மலேரியா, தொழுநோய், சரும நோய் இதெல்லாம் சுத்தமா இல்லாம செய்து விடலாம் என்று சொன்னாரு.

புத்தகம் படிக்கிறதுனாலே கிடைக்கிற அறிவை அறிவு பூர்வமாக பயன்படுத்தினால்தான் பண்பாடு வளர்ந்ததாக அர்த்தம்.

எல்லா புத்தகமும் வாழ்க்கைக்குத் துணையாக ஆகி விட முடியாது!

திருக்குறளைத்தான் வாழ்க்கைத் துணைன்னு சொல்றோம்.

பல புத்தகங்களை பஸ் துணை என்று வேணும்னா சொல்லலாம்... பஸ் பிரயாணம் முடியிற வரைக்கும் அது துணையா இருக்கம். அதுக்கப்புறம் பிரிஞ்சி போயிடும்.

சில புத்தகங்கள் ஒரு வாரத்துக்குத் துணையா இருக்கும். அப்புறம் போயிடும்... அடுத்த வாரத்துக்கு இன்னொன்று வாங்கணும்...

கடையிலே போய் இந்த வாரம் இந்த பத்திரிகை வந்துட்டுதா? என்று தான் கேட்போம்!

இந்த வாரம் திருக்குறள் வந்துட்டுதான்னு கேக்கிறதில்லை! அது எப்பவும் நம்ம கூடவே இருக்கிறது. நல்ல புத்தகத்துக்கு அதுதான் அழகு.

கற்காமல் இருக்கிறதை விட பிறக்காமல் இருக்கிறதே மேல். ஏனென்றால் அறியாமைதான் கஷ்டங்கள் அனைத்திற்கும் காரணம் என்கிறார் பிளேட்டோ!

கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஒரு பத்திரிகைச் செய்தி: அமெரிக்காவிலே கிளிண்டன் வில்லி என்கிற இடம். அங்கே இருக்கிறவங்க ருடால்ப் தம்பதிகள். இவங்க புத்தகமாக வாங்கி குவிச்சு வைச்சிருக்காங்களாம். வீடு பூராவும் நிரம்பிப் போச்சு.

அதனாலே பக்கத்திலே உள்ள வீட்டை விலைக்கு வாங்கி அங்கே குடியிருக்க போயிட்டாங்களாம்.

அவங்ககிட்டே 42000 புத்தகம் இருக்குதாம்.

1925 இல் பெர்னார்ட் ஷாவுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு குடுத்திருங்காங்க. அப்பவும் அவரு தமாஷா சொன்னாராம்.

இந்த வருஷத்திலே நான் புத்தகம் எதையும் எழுதி வெளியிடேல. உலகம் அதைக் கண்டு விடுதலை உணர்ச்சியோட சந்தோஷப்பட்டு எனக்கு நன்றி பாராட்டி செஞ்ச காரியம் இது! அப்படி என்றாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வித்தியா விருத்திச் சங்க சிறுவர் இல்லம்

திருநெல்வேலி என்னும் சிற்றூரை ஊடறுத்து செல்லும் கலாசாலை வீதி முன்னே சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை ஒன்றை நோக்கிச் சென்றமையால் இப்பெயர் பெற்றது. யாழ்ப்பாணத்திலே பலருக்கு கல்விக் கண்களை திறந்து விட்ட பெரியார்; இந்து போர்ட் இராசரத்தினம் நீண்ட காலமாக ஏறக்குறைய 40 ஆண்டுகளாக தொண்டுப்பணி செய்தவர்.

அவர் கட்டிக் காத்து கையளிப்பு செய்த நிறுவனமே சைவ வித்தியா விருத்திச் சங்கம். கலாசாலையையும் முத்துத்தம்பி வித்தியாலயத்தையும் திரு.சு.ராசரத்தினம் திறமையாக நிர்வகித்து வந்தார். ஆனால் காலச் சூழலிலே சிக்கி சைவ ஆசிரிய கலாசாலை மூடப்பட்ட போது திருநெல்வேலி சமூகம் வாய் மூடி மௌனியாக நின்றது. மூடிய கலாசாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கு சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்கு எந்த நிறுவனமும் தோள் தர முன்வரவில்லை. எனினும் பெரியார் இராசரத்தினம் பேணி வளர்த்த முத்துத்தம்பி அநாதை இல்லம் மூடப்படாமல் தொடர்ந்து இயங்கியது. போரின் விளைவுகளையும் இடப்பெயர்வையும் தாங்கிக் கொண்டு இன்னமும் பூங்குருவிகளுக்கு அடைக்கலம் தந்து நிற்கிறது.

ஆதரவற்ற அன்பைத் தேடுகின்ற 200 சிறுவர்களைப் பேணுகின்ற நிறுவனமாக இன்று சைவ வித்தியா விருத்திச் சங்கம் உலகெங்கும் அறியப்பட்ட நிறுவனமாக தொண்டுப் பணியை தொடர்கிறது. முத்துத்தம்பி அநாதை இல்லம் சைவச் சிறுவர் வதியும் இல்லமாக 'நிறைவாழ்வு இல்லம்' என்ற இலக்கை நோக்கி இயங்கிக் கொண்டு இருக்கிறது.

நீண்டகாலமாக நிறைய பிள்ளைகள் தங்கி வாழும் இல்லம் என்ற தனிச்சிறப்புடன் கலாசாலை வீதிக்கே கலகலப்பாக உள்ளது. இலங்கை எங்கும் பரந்த ஆதரவற்ற சிறார் இந்த இல்லத்தில் ஆதரவு தேடி வருகின்றனர். இல்லத்தின் செயற்பாடுகளை திட்டமிட்டு செயற்படுத்தும் பாரிய பணியை பொறுப்பேற்ற நிலையில் இல்லம் பற்றிய செய்திகளையும் தகவல்களையும் ஒரு நோக்கில் தரும் சிறு முயற்சியே இக்கட்டுரை யின் உள்ளடக்கமாகும்.

இல்லத்திற்கு பிள்ளைகளை அனுமதிப்பதில் சிறுவர் நன்னடத்தை அதிகாரியும் நல்லூர் பிரதேச செயலகமும் திட்டப் பணிப்பாளரும் இணைந்தே செயற்பட வேண்டி உள்ளது. இல்லத்திலே சேர்க்க வேண்டிய பிள்ளைகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் தாம் வாழும் பிரதேசத்து கிராம சேவகரின் உறுதிப்பாட்டைப் பெற்று பிரதேச செயலரின் பரிந்துரையுடன் சென்று சிறுவர் நன்னடத்தை அதிகாரியின் நேர்காணலில் நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டும். சிறுவர் நன்னடத்தை அதிகாரி யாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து மூன்று ஆண்டுகள் இல்லத்தில் வாழ முதலில் பரிந்துரை செய்வார். நல்லூர் பிரதேச செயலகம் எழுத்து மூலமான அனுமதியை வழங்கி பிரதியைச் சைவ சிறுவர் இல்ல நிர்வாகத்திற்கு அனுப்பி வைக்கும்.

அனுமதிக் கடிதத்துடனும் ஆவலுடனும் சிறுவர்களை கையில் பிடித்தபடி கலாசாலை வீதியிலே நடந்து வரும் பிஞ்சுக் கால்கள் எதையும் முடிவு செய்ய முடியாத குஞ்சுகள் இல்லத்து வாழ்க்கை பற்றி கிடைத்த துளிச் செய்திகளை மனதிலே அசை போட்ட படி ஆடி வரும் கோலம் "சைவ வித்தியா விருத்திச் சங்கம்" என்ற பெயர்ப் பலகையை கண்டு மனம் நிறைய உள்நுழையும் உருவங்கள். செருப்பின்றி வெயிலில் நடந்த வேதனை கண்களில் தெரிய, நீர் நிறைந்த பாத்திரத்தை தேடும் கண்களுக்கு விருந்தாக ஒரு பிளாஸ்ரிக் வாளி. மூடியின் மேலே ஒரு வெள்ளிக்குவளை. அதைக் கண்டதும் சில கைகள் கூசி நிற்கும் கொடுமையைக் காணும் போது உள்ளம் ஒரு முறை விறைக்கும். 'தண்ணீர் நிறைய பருகலாம்' என்று சொன்னால் போதும். சிறுவர்களும் பாதுகாவலரும் ஆவலாய் நீரைப் பருக, விறைத்த உள்ளம் மீண்டும் சிலிர்க்கும். களைப்பு தீர அனுமதி தொடர்பான அறிவுறுத்தல்கள் தொடரும்.

கேட்டு மனம் வாடும் தாய், தந்தை, பாதுகாவலரிடம் பரிவு காட்ட முடியாத நிலையில் நிறுதிட்டமாகவே வாயிலிருந்து சொற்கள் வெளி வரும். இங்கே பணி செய்பவர்கள் பிள்ளை பாசம் அற்றவர்களா என்று எண்ணி மனம் [illegible] கிடைக்கிறது.

அதன்பிறகு சிறுவர் அமைதியாக இல்லத்தில் நுழைகிறார்கள். கூட்டி வந்தோர் விழிக்கடையில் சுரக்கும் நீர் விரைவில் வற்றி விடும். நிறை வாழ்வு இல்லத்தின் வெளிப்புற வாயிலை மட்டும் காணும் பலர் அதை ஒரு சிறைக்கூடம் என தவறாக எண்ணுவதும் உண்டு. ஆனால் இந்த இல்லம் நமக்கு ஏற்ற இடம் என்பதை சிறுவர்கள் விரைவிலேயே உணர்ந்து கொள்கிறார்கள்.

சிறுவர்கள் ஆறு வயது முதலே சேர்த்துக்கொள்ளப் படுவதால் கல்வி கற்கும் தொடக்க நிலையே அவர்களுக்கு ஓர் ஒழுங்கில் அமைய வாய்ப்பு ஏற்படுகின்றது. பள்ளிக் கல்வியின் நிலையை உணரவும் அதற்காக சில முன்னோடி பயிற்சிகள் தேவை என்பதையும் அறிய முடிகின்றது. இல்லத்தின் நாளாந்த நடைமுறைகளால் அவர்கள் புதிய பயிற்சியை பெறுகிறார்கள். காலத்தோடு ஒட்டி இயங்கும் இயற்கையான செயற்பாட்டில் பழக்கப் படுகிறார்கள்.

ஒரு நாளின் தொடக்கத்தை [illegible] நிலையில் உணர்கிறார்கள். பகலையும் இரவையும் நன்கு பகுத்து அறிந்து தொழிற்படும் பக்குவம் பெறுகிறார்கள். பண்டைக்கால மரபான குருகுலக் கல்வியின் தொடர்ச்சியாக இல்லத்து நடைமுறைகள் உள்ளன. அதிகாலையிலே எழுந்து இறை வழிபாட்டுடன் தமது கடமைகளைத் தொடங்கும் சிறுவர்கள் கூட்டுமுயற்சியின் பயனை அனுபவத்தால் அறிந்து கொள்கின்றனர்.



**சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

தாம் வாழும் இல்லத்தையும் சுற்றுப்புறச் சூழலையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்ற ஆவலோடு கடமைகளைச் செய்கிறார்கள். குழு நிலையிலே இணைந்து அந்தப் பிஞ்சுக் கரங்கள் சூழலைத் தூய்மை செய்கின்றன. தன்னைக் காட்டிலும் உயரமான கூட்டுமாறு கொண்டு முற்றத்தைக் கூட்டும் ஒவ்வொரு சிறுவரும் என்னால் இதைச் செய்ய முடியும் என்ற தன்னம்பிக்கையோடு தொழிற்படுவதைக் காணும் போது உள்ளம் பரவசப்படுகிறது. அவர்கள் கடமை செய்யும் போது உடன் நின்று பாராட்டினால் போதும். அந்தச் சின்ன முகங்களில் ஆயிரம் தாமரை மலரும். அது எமக்கு புதிய இன்பம் தருகிறது.

உணவுப் பழக்கம் சிறுவருக்கு உயர்ந்த கொடைப் பயிற்சியாக உள்ளது. எங்கள் உணவு மண்டபத்தின் பெயர் பொங்கல் மண்டபம். தைப்பொங்கல் நாளன்று திறந்து வைக்கப்பட்டதால் அப்பெயரைப் பெற்றது. மேலும் நாளும் சோறு பொங்குவதால் பொருத்தமான பெயராக அமைந்தது.

200 பிள்ளைகளும் ஒரே நேரத்தில் உணவருந்த ஏற்ற வசதியை அரிமாக்கழகம் செய்து தந்துள்ளது. ஆண்களும் பெண்களுமாய் அனைத்துக் குழந்தைகளும் ஒன்றாய் இருந்து களிப்புடன் அருந்த உணவு கொடை வழங்கும் வள்ளல்கள் உலகெங்கும் இருக்கிறார்கள். அவர்கள் வழங்கும் கொடையில் மதிய உணவு சத்து உணவாக, விருப்பமான உணவாக சிறுவர் வயிற்றை நிரப்பி வாழ வைக்கிறது. சில வேளைகளில் உணவுக் கொடை வழங்குவோரும் சிறுவர்களுடன் உடனிருந்து உண்ணும் வழக்கமும் உண்டு. உணவு உண்ணத் தொடங்கும் முன்னர் பாடப்படும் 'அன்னம் பாலிக்கும்….' என்ற தேவாரம் சிறு குரல் வழிவந்து செவியிலே சேரும்போது கொடையாளர் நெஞ்சம் சிலிர்க்கும். கொடையின் பயன் நன்கு உணரப்படும்.

உடைகள் இல்லத்தில் சிறார்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. இல்ல ஆடைகள், பள்ளி சீருடைகள், வெளிச்செல்லும் ஆடைகள் என மூவகையான ஆடைகள் வழங்கப்படும். இவற்றுள் உள்ளாடைகளும் அடங்கும். எல்லா ஆடைகளும் புதிதாக கொடுக்க முடிவதில்லை. எனவே பயன்படுத்தப்பட்ட குறிப்பாக பள்ளிச்சீருடைகளைச் சேகரித்து வழங்குவதுண்டு. இல்லத்து சிறார்களுக்கு அன்பளிப்பாய் புத்தாடைகள் கிடைக்கும் போது நாம் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறோம். சிறுவர் உள்ளத்தில் என்றோ ஒருநாள் வீட்டிலே கேட்ட போது கிடையாத அந்தப் புத்தாடை கையில் கிடைக்கும் போது முகம் பூவாய் மலரும்.



**முனைவர் ச.மனோன்மணி**
முன்னாள் இல்லத்திட்டப் பணிப்பாளர்,
சைவச் சிறுவர் இல்லம்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்

அதைக் கண்ட நாம் அந்தக் கொடை நல்கிய அன்புநெஞ்சங்களை மீண்டும் மனமார வாழ்த்துவோம். வீட்டிலே கிடைக்காதவற்றை இல்லம் வழங்கும் போது இல்லத்து வாழ்வும் சிறுவருக்கு இனிப்பாகி விடுகின்றது. பள்ளிச் சீருடையிலே சிறுவர்கள் அனைவரும் வெண்புறாக்கள் போல அணியாய் நடந்து செல்லும் காட்சி கண்ணுக்கு நல்விருந்து. ஆனால் பள்ளிச் சீருடையும் காலணியும் புத்தகப்பையும் கல்வி உபகரணங்களும் என இருநூறு சிறுவர்களுக்கும் வழங்குவது என்பது மிகப்பெருஞ் சுமையான கொடையாகும். காலம் அதற்கான கொடை வள்ளல்களை இனம் காட்டும் என்ற நம்பிக்கை எமக்கு என்றும் உண்டு.

இல்லத்திலே வாழும் குழந்தைகளுக்கு ஏற்ற கல்வியைக் கொடுத்து அவர்களை ஆற்றலுள்ள மனிதர்களாகச் சமூகத்துக்கு கையளிப்பதே எமது பணியாகும். பள்ளிக் கல்வி நிலையில் இந்துபோர்ட் இராசரத்தினத்தின் மேற்பார்வையில் சிறப்புற இயங்கிய முத்துத்தம்பி வித்தியாசாலை இன்று அரசாங்கப் பாடசாலையாக தரமுயர்ந்து முத்துத்தம்பி மகா வித்தியாலயமாக விளங்குகிறது. யாழ்ப்பாணத்திலே இராமநாத வள்ளல் நிறுவிய பரமேஸ்வரா கல்லூரியின் இருப்பிடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக உருமாறிய போது பரமேஸ்வரா கல்லூரி மாணவர்களும் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் அடைக்கலம் புகுந்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 411





நான் மற்ற வீரர்களிடம் என்னைப் பின்தொடர்ந்து வரவேண்டாம் என்று சொல்லிவிட்டுக் குரல் கேட்ட இடத்தை நோக்கிப் போனேன். அந்தப் பெண்ணரசி என்னை முதல் நாள் மாதிரியே புன்னகையுடன் வரவேற்றாள். சிறிது நேரம் என்னை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஏதோ சொல்ல முயன்றாள் எனக்கு விளங்கவில்லை.

“பிறகு என் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போனாள். அவளுடன் போவதற்கு எனக்குக் கொஞ்சம் கூடத் தயக்கம் உண்டாகவில்லை. காட்டு வழியில் போகும்போது முள் செடிகளின் கிளைகள் என் மீது படாதவண்ணம் அவள் விலக்கி விட்டுக்கொண்டு போனது என் நெஞ்சை உருக்கியது. கொஞ்ச தூரம் போனபிறகு ஒரு குடிசை தென்பட்டது. அந்தக் குடிசைக்குள் ஓர் அகல் விளக்கு மினுக்கு மினுக்கு என்று எரிந்தது. அந்த வெளிச்சத்தில் அங்கே படுத்திருந்த கிழவன் ஒருவனைக் கண்டேன். அவன் நோயாகப் படுத்திருந்தான் என்பதைத் தெரிந்து கொண்டேன். அவன் உடம்பெல்லாம் பொறுக்க முடியாத குளிரினால் நடுங்குவதுபோல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவன் உடம்பையே சில சமயம் தூக்கித் தூக்கிப் போட்டது. பற்கள் கிட்டிப் போயிருந்தன. கண்கள் சிவந்து தணல்களைப் போல் அனல் வீசின. ஏதேதோ உருத் தெரியாத வார்த்தைகளை அவன் பிதற்றிக் கொண்டிருந்தான்.

“உங்களுக்கு நினைவில் இருக்கிறதா? இன்று பாதாளக் குகையில் நாம் பார்த்த மஹா போதி விஹாரத்தில் ஒரு பிக்கு நடுங்கிக் கொண்டிருந்தாரல்லவா? அவர் பேரில் தேவர்கள் ஆவிர்ப்பவித்திருந்ததாகச் சொன்னார்கள் அல்லவா? அப்போது எனக்குக் காட்டின் மத்தியில் குடிசையில் பார்த்த கிழவன் ஞாபகம் வந்தது. அந்தப் பிக்குவின் பேரில் தேவர்கள் ஆவிர்ப்பவித்திருக்கிறார்களா அல்லது நடுக்கு ஜுரம் என்ற கொடிய நோய் ஆவிர்ப்பவித்திருக்கிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டது. அதைப் பற்றி நான் பிரஸ்தாபிக்கவில்லை. ஏன் பிரஸ்தாபிக்க வேண்டும்? ஏன் அந்தப் பக்திமான்களின் நம்பிக்கையைக் கெடுக்க வேண்டும்? இந்த வருஷத்தில் இந்தப் பெரஹாரத் திருவிழா நடப்பதற்கு அனுமதி கொடுத்தேனே, ஒரு விதத்தில் பெரிய தவறு செய்துவிட்டேன் என்று தோன்றுகிறது. ஏற்கெனவே பாதிக்கு மேல் அழிந்து போயிருக்கும் இந்தப் புராதன நகரத்திற்குக் குளிர்காய்ச்சலும் வந்து விட்டால் என்ன கதி ஆவது? மிச்சமிருக்கும் ஜனங்களும் இங்கிருந்து ஓட வேண்டியதுதான்.”

இவ்வாறு சொல்லி அருள்மொழிவர்மர் ஏதோ யோசனையில் ஆழ்ந்தார். சற்றுப் பொறுத்துப் பார்த்துவிட்டு வந்தியத்தேவன் “ஐயா! இந்த நகரம் எப்படியாவது போகட்டும். குடிசையில் பிறகு என்ன நடந்தது? சொல்லுங்கள்!” என்றான்.


“குடிசையில் ஒன்றும் நடக்கவில்லை. அந்த மாதரசி நான் அதிக நேரம் அங்கு நிற்கக் கூடாது என்று கருதினாள் போலிருக்கிறது. உடனே என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியில் வந்து விட்டாள். பிறகு சில சமிக்ஞைகள் மூலம், தான் சொல்ல விரும்பியதைச் சொன்னாள். அவள் சொல்ல விரும்பியது என்னவென்பதை என் மனம் தெரிந்து கொண்டு விட்டது. ‘இந்தப் பிரதேசத்தில் இருக்க வேண்டாம். இங்கே இருந்தால் இந்தக் குளிர் காய்ச்சல் நோய் வந்து விடும். உடனே இங்கிருந்து தாவடியைப் பெயர்த்துக் கொண்டு போய் விடு!’ என்று அவள் சமிக்ஞைகளின் மூலமாகச் சொல்லி என்னையும் தெரிந்துகொள்ளச் செய்துவிட்டாள். என் பேரில் அவளுக்குள்ள அளவில்லாத அன்பின் காரணமாகவே இந்த எச்சரிக்கை செய்ததாகவும் அறிந்து கொண்டேன். தெய்வத்தின் எச்சரிக்கையாகவே அதை எடுத்துக் கொண்டு அன்றிரவே தாவடியை அங்கிருந்து கிளப்பும்படி கட்டளையிட்டேன். என்னுடனிருந்த வீரர்களுக்கும் அது மகிழ்ச்சியை உண்டாக்கிற்று.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## இரண்டு தவளைகள்



அது ஒரு கோடை காலம். அதனால காட்டுல இருக்குற தண்ணி குட்டைகள் எல்லாம் வறண்டு போய்டுச்சு.

அதனால அங்க இருக்குற தவளைகள் எல்லாம் நல்ல தண்ணி இருக்குற குளத்தை தேடி ரொம்ப தூரம் நடந்து போச்சுங்க.

அப்புடி போகுறப்ப ரெண்டு தவளைகள் மட்டும் ஒரு பெரிய குழிக்குள்ள விழுந்துடுச்சுங்க.

அந்த குழி ரொம்ப இருட்டாகவும் ரொம்ப ஆழமாவும் இருந்துச்சு. அதனால் ரெண்டு தவளைகளும் ரொம்ப பயந்து போச்சுங்க.

ரெண்டு தவளைகளும் வெளிய வர எழும்பி எழும்பி குதிச்சு பாத்துச்சுங்க. ஆனா அந்த குழி ரொம்ப ஆழமா இருந்ததால அதுங்களால வெளிய வர முடியல.

வெளிய இருந்த தவளைகளோட நண்பர்களால கூட அதுங்களுக்கு எந்த ஒரு உதவியும் செய்ய முடியல.

அதுல ஒரு தவளை ரொம்ப தாழ்வு மனப்பான்மை கொண்டதாக இருந்துச்சு. அதனால தன்னோட வாழ்வு இதோட முடிஞ்சுச்சுனு நினைச்சது. என்னால முடியாது இந்த குழி தான் எனக்கு மரண குழினு புலம்பி அங்கேயே செத்துப்போச்சு.

ஆனா இன்னொரு தவளை ரொம்ப தன்னம்பிக்கை கொண்டதா இருந்துச்சு. அதனால தொடர்ந்து வெளியில வர குதிச்சி குதிச்சு முயற்சி செஞ்சிகிட்டே இருந்துச்சு.

ஒவ்வொரு தடவை குதிக்கிறப்பவும் தன்னோட உயரம் கூடுனத உணர்ந்த அந்த தவளையோட தன்னம்பிக்கை உயர்ந்துக்கிட்டே போச்சு. ஒரு தடவ ரொம்ப முயற்சி பண்ணி அது குதிக்கிறப்ப அது அந்த குழியை விட்டே வெளியே வந்து விழுந்துச்சு.

தன்னம்பிக்கை உடையவங்களுக்கு ஊக்கமும் பலமும் வந்து சேரும்னு இந்த கதை மூலமா நாம புரிஞ்சிக்கலாம்.

எந்த ஒரு சூழ்நிலையிலேயும் தாழ்வு மனப்பான்மையை மட்டும் நாம வளர விடவே கூடாது. அதுக்கு சிறந்த மருந்து எப்பவும் தன்னம்பிக்கயோட இருக்குறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதார பிறருக்குச் செய்யும் உதவி
பல மடங்கு பலனாக வந்து சேரும்.
– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம் தென்னம்பிள்ளைகள் படும் பாட்டைப் பாரீரோ!

பெற்ற பிள்ளைக்கு ஒப்பாகத் தென்னம் பிள்ளைகளைப் போற்றுகின்ற உயர்ந்த பண்பு நம் தமிழ் இனத்துக்குரியது.

அந்தளவுக்கு தென்னம்பிள்ளைகள் எங்கள் வாழ்வியலோடு இரண்டறக் கலந்துள்ளன.

பெற்ற பிள்ளையைவிட, தென்னம் பிள்ளை உயர்வானது என்று பாடிய கவிஞன்; பிள்ளையைப் பெற்றால் கண்ணீரு; தென்னையைப் பெற்றால் இளநீரு என்று பெற்ற பிள்ளையோடு தென்னம்பிள்ளையை ஒப்புமை செய்து பிள்ளையைவிட, தென்னை உயர்வானது எனக் கவிதை ஆக்கினான்.

நம் தமிழ் மூதாட்டி ஒளவையோ நன்றியை எடுத்துரைக்கும்கால், ... வளர் தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால் என்று தென்னம்பிள்ளையின் நன்றிப் பெருக்கை ஒப்பிட்டு நன்றி எனும் உயர்ந்த அறத்தை உணர்த்தி நின்றார்.

ஆம், தென்னம்பிள்ளைக்கு நீர் ஊற்றி அதனைப் பிள்ளைபோல பராமரித்து வளர்த்து விட, அந்தத் தென்னை வளர்ந்து தன்னை ஆளாக்கிய பெற்றோருக்கு இளநீரைத் தலையாலே கொடுத்து பிரதி உபகாரம் செய்கிறது.

எனவே இந்த உலகில் நன்றிக்கு மிக உயர்ந்த எடுத்துக் காட்டு தென்னம்பிள்ளை என்பதை நம் தமிழ் மூதாட்டி நமக்கு உணர்த்தியுள்ளார்.

ஆம், நூறு ஆண்டுகளுக்கு மேலாக நின்று பயன் தரும் தென்னையின் மகத்துவம் கொஞ்சமல்ல.

எனினும் எங்கள் யாழ்ப்பாண மண்ணில் தென்னம்பிள்ளைகள் தற்போதுகண்ணீர் விட்டு அழுகின்றன.

அன்பார்ந்த பெற்றோர்களே! எங்களைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தீர்கள். நாங்களும் நூற்றாண்டு காலம் வாழ்ந்து உங்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் பயன் தருவோம் என்று எண்ணியிருந்தோம்.

என் செய்வது சதியோ அன்றி விதியோ யாமறியோம். வெள்ளை ஈக்கள் எங்களை ஆக்கிரமித்துள்ளன.

இலட்சக்கணக்கான வெள்ளை ஈக்கள் எங்கள் ஓலைகளின் கீழ்ப்பகுதியில் குடியிருந்து எச்சம் போட, அந்த எச்சம் விழுந்து ஓலை முழுவதையும் கறுப்பாக்கிவிட, பச்சையம் பறிபோய் ஓலைகள் கருகி, எங்களின் உணவாகிய மாப்பொருள் இல்லாமல்போக, நாங்கள் உயிர் துறக்கும் அபாயத்தில் நிற்கின்றோம்.

இருந்தும் இதுபற்றி நீங்கள் இம்மியும் கவனிப்பதாகத் தெரியவில்லை.

அன்புக்குரியவர்களே! உங்கள் வடக்கின் ஆளுநர், மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்கள் என்ற நிர்வாகத்தினர் எங்கள் தொடர்பில் இன்னமும் பாராமுகமாக இருப்பது ஏன்?

வடக்கில் முக்கோண வலயம் உருவாக்கப்பட்டுள்ளது. நாங்கள் உயிரிழந்த பின்பு முக்கோண வலயம் எங்களை அடக்கம் செய்யும் இடமாகவா இருக்கப் போகிறது.

ஆகையால் ஒரு கணம் எங்களை அண்ணாந்து பாருங்கள். எங்கள் கோலத்தைப் பாருங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு இப்படியொரு ஆபத்து என்றால் விட்டுவிடுவீர்களா என்ன?

நாங்களும் உங்கள் பிள்ளைகள் தானே! எங்களைக் காப்பாற்றுங்கள். எங்களை நீங்கள் காப்பாற்றினால், உங்களை நாங்கள் நிச்சயம் வாழவைப்போம். இப்படிக் கெஞ்சுகின்ற எம் தென்னம் பிள்ளைகளை நாம் காப்பாற்ற வேண்டாமோ!

# தேசிய நோக்கத்துக்காக அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்

## ஜே.வி.பி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரேயொரு தேசிய நோக்கத்துக்காக உழைக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்ட பெண்கள் மாநாட்டில் உரையாற்றும் போதே ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "எமது நாட்டின் நிதிக் கொள்கையைத் தீர்மானிப்பது சர்வதேச நாணய நிதியமாகும். எமது நாட்டில் எமக்கு எந்த உரிமையும் இல்லை. நாட்டு மக்களுக்கு காணி உறுதிகளை வழங்குவதாகக் கூறி தம் புள்ளைக்கு மக்களை வரவழைக்கின்றனர்.

ஆனால் அரசாங்கத்துக்குச் சொந்தமாக பால் பண்ணைகளை இந்தியாவின் அமுல் கம்பெனிக்கு விற்கிறார்கள்.

அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுகத்தின் முனையங்கள், எண்ணெய்க் குதங்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

எனவே நாடு சுதந்திரமானதா? இந்த நிலைமைக்கு எதிராக உண்மையான சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள புதிய பாணியிலான சுதந்திரப் போராட்டமொன்று எமக்குத் தேவை.

அதேபோன்று சிங்கள, தமிழ், முஸ்லிமாக உள்ள நாம் அனைவரும் ஒரு தேசிய நோக்கத்துக்காக உழைக்க வேண்டும்.

அதிகாரத்துக்காக இது வரை இருந்த ஆட்சியாளர்கள் மக்களை மத ரீதியாக, இனத்துவ ரீதியாக பிரித்தாண்ட யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைப்போம். முன்னேற்றமடைந்த கலாசார சமூகமொன்றை கொண்ட மனிதர்களை கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும்" இவ்வாறு ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (ம-7)

# ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு தயார்

## சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டால், சவாலை ஏற்றுக்கொள்வதாக ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாட்டிற்காக ஒன்றிணைந்த நடவடிக்கையின் அடிப்படையில் பரந்த அரசியல் கூட்டணியை உருவாக்குவதே நம்பிக்கை எனவும், பொதுவான உடன்படிக்கைகள் மூலம் அரசியல் கூட்டணியை பேணுவதே நோக்கமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன் கீழ் ஜனாதிபதித் தேர்தலும், வேட்பாளர் தெரிவும் இடம்பெறும் எனத் தெரிவித்த பாட்டளி சம்பிக்க ரணவக்க, நாட்டின் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி வேட்பாளராக வேண்டும் என்று கூட்டாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டால் சவாலை ஏற்கத் தயார் எனவும் தெரிவித்தார்.

பொறுப்பு என்ன என்பது தமக்கு பொருந்தாது எனத் தெரிவித்த சம்பிக்க ரணவக்க, இம்முறையும் பொது நோக்கத்திற்காகவே தனது பங்களிப்பு என்றும் தெரிவித்தார்.

எந்தவொரு பொருத்தமான ஜனாதிபதி வேட்பாளருக்கும் தனது ஆதரவு இருக்கும் என்றும், அதற்கு தகுதியாக நான் முன்மொழியப்பட்டால், சவாலை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாகவும் பாட்டளி சம்பிக்க ரணவக்க மேலும் குறிப்பிட்டார். (ம-7)

# பொலிஸ்மா அதிபரை பதவி நீக்க சதி

(கொழும்பு)

பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அந்த பதவியிலிருந்து நீக்குவதற்கு சர்வதேச சதித்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச போதைப் பொருள் வர்த்தகர்கள் இணைந்து இந்த முயற்சியை மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சதித்திட்டம் தொடர்பில் இலங்கை புலனாய்வு பிரிவு தகவல்களை திரட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் டுபாயிலிருந்து இலங்கை அழைத்து வரப்பட்ட பியூமா என்ற பாதாள உலகக் குழு உறுப்பினரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் மூலம் கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் புலனாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த புலனாய்வு அறிக்கையின் பிரதியொன்று ஜனாதிபதி காரியாலயத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோரை கொலை செய்தேனும் யுக்திய நடவடிக்கையை இடைநிறுத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் ஒழிப்பில் ஈடுபட்டு வரும் பொலிஸ் உயர் அதிகாரிகள் பலருக்கு வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் அச்சுறுத்தல் விடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

# சுற்றாடல் இராஜாங்க அமைச்சராக ஜானக வக்கும்புர நியமனம்

சுற்றாடல் இராஜாங்க அமைச்சராக ஜானக வக்கும்புர நேற்று (செவ்வாய்க்கிழமை) ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்

அவர் ஏற்கனவே மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சராக பதவி வகித்து வரும் நிலையில் அதற்கு மேலதிகமாக தற்போது சுற்றாடல் இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக குறித்த அமைச்சுப் பதவியை கெஹலிய ரம்புகவெல்ல வகித்திருந்த நிலையில் அந்த பதவி தற்போது ஜானக வக்கும்புரவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

தரமற்ற மருந்து இறக்குமதி தொடர்பான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதை அடுத்து கெஹலிய ரம்புகவெல்ல குறித்த இராஜாங்க அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# ஆசிய பசுபிக் மாநாடு

## தலைவராக மகிந்த அமரவீர

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 37ஆவது ஆசிய பசுபிக் மாநாட்டின் அடுத்த இரண்டு வருடங்களுக்குத் தலைவராக விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஆரம்பமான 37ஆவது ஆசிய பசுபிக் பிராந்திய ஆரம்ப அமர்வில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2024ஆம் ஆண்டு முதல் 2026ஆம் ஆண்டு வரை இலங்கை மன்றத்தின் தலைமைப் பதவியை வகிக்கும் எனவும், அதற்கான பொறுப்பு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

07



### யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற்கள்

பேச்சுத் தமிழில் சொற்களும் பலவிதமான மாற்றங்களுக்கு உள்ளாகின்றன. சில சொற்களைக் குறுக்கி ஒலிப்பதும் சிலவற்றை நீட்டி ஒலிப்பதும் சிலவற்றின் ஒலிகளை மாற்றி ஒலிப்பதும் சாதாரணமாகக் காணக்கூடியதே. யாழ்ப்பாணத் தமிழும் இதற்கு விதிவிலக்கல்ல. எனினும் சொற்களை உச்சரிப்பதில் யாழ்ப்பாணத் தமிழில் ஒப்பீட்டு ரீதியில் குறைவான திரிபுகளே இருப்பதாகக் கூறலாம். தமிழ்நாட்டுப் பேச்சுத் தமிழுடன் ஒப்பிட்டு நோக்குவது இதனைப் புரிந்து கொள்ள உதவும். எடுத்துக்காட்டாக:

- ன்,ம் போன்ற மெய்யெழுத்துக்களில் முடியும் பல சொற்களை உச்சரிக்கும்போது, இந்த எழுத்துக்களை முழுமையாக உச்சரிக்காமல், ஒரு மூக்கொலியுடன் நிறுத்துவது தமிழ் நாட்டில் பரவலாகக் காணப்படுகின்றது. நான் என்பதை நா என்றும் மரம் என்பதை மர என்றும் உச்சரிப்பதைக் காணலாம். நான் என்பதைச் சில சமயங்களில் நானு என்று நீட்டி உச்சரிக்கும் வழக்கமும் உண்டு. யாழ்ப்பாணத்தில் இச்சொற்களை நான், மரம் என்று முழுமையாக உச்சரிப்பார்கள்.

- இகர, உகரங்கள் தனியாகவோ, உயிர்மெய்யாகவோ சொல் முதலில் வருகின்றபோது, தமிழ்நாட்டில் பல இடங்களில், அவற்றை முறையே எகர, ஒகரங்களாக உச்சரிப்பார்கள். எடுத்துக்காட்டாக, இடம், எடம் எனவும் குடம் கொடம் எனவும் ஆவதைப் பார்க்கலாம். இந்த உச்சரிப்புத் திரிபும் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் இல்லை.

எனினும் ஒலிகள் திரிபு அடைவது யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் இல்லாதது அல்ல. இதற்குப் பல எடுத்துக் காட்டுகள் உள்ளன. பல சொற்களில் றகரம், டகரமாகத் திரிபு அடைவதுண்டு. ஒன்று என்பது ஒண்டு என்றும் வென்று என்பது வெண்டு என்றும் திரியும். இதுபோலவே கன்று, பன்றி, தின்று என்பவை முறையே கண்டு, பண்டி, திண்டு என வழங்குவதை அவதானிக்கலாம்.

யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் நான்கு வகையான பேச்சு வகைகள் உள்ளன. அவற்றை மரியாதை மிகு பேச்சு வகை, இடைநிலை பேச்சுவகை, சாதாரண பேச்சுவகை, மரியாதை அற்ற பேச்சு வகை என வகைப்படுத்தலாம்.

இதில் மரியாதை மிகு வகை என்பது "வாருங்கள் அல்லது வாங்கோ", "சொல்லுங்கள் அல்லது சொல்லுங்கோ" என்று பன்மையாக பேசப்படும் வகையாகும்.

இடைநிலை பேச்சு வகை என்பது "வாரும்", "சொல்லும்" என பேசப்படும் வகையாகும். சாதாரண பேச்சு வகை "வா", "போ", "இரு" போன்று பேசப்படும் வகையாகும்.

மரியாதை அற்ற பேச்சு வகை "வாடா", "சொல்லடா" என மரியாதையற்ற பயன்பாடாகும். இந்த மரியாதை அற்ற சொற்கள் நண்பர்களிடையேயோ, இளைய சகோதரர்களிடம் பெரியவர்களாலோ, குழந்தைகளிடம் பெற்றோராலோ, சிறியவர்களிடம் பெரியவர்களாலோ பயன்படுத்தப்படும்.

சிறியவர்களாக இருந்தாலும் பெரியவர்கள் அவர்களிடம், "வாங்கோ, சொல்லுங்கோ" போன்ற மரியாதையான சொற்களைப் பயன்படுத்தும் முறையும் உள்ளது. அதேவேளை கோபத்தில் பேசும் போதும் பேசப்படுவதுண்டு.

இவற்றில் "இடைநிலை பேச்சு வகை" யாழ்ப்பாணத் தமிழரிடம் மட்டுமே காணப்படும் ஒரு தனிச் சிறப்பாகும். இந்த இடைநிலை பேச்சுவகை, தமிழ்நாட்டு பழங்கால அரச திரைப்படங்களில் காணப்பட்டாலும் தற்போது பெரும்பாலும் மறைந்து விட்ட நிலை என்றே கொள்ளக்கூடியதாக உள்ளது.

இந்த இடை நிலை பேச்சு வகை நண்பர்களிடையேயும் சம வயதினரிடையேயுமே அதிக வழக்கில் உள்ளது. சில விடங்களில் வயதில் பெரியவர்கள் வயது குறைந்தவர்களையும் தொழில் நிலைகளில் உயர் நிலையில் இருப்போர் மக்களையும் பேசும் இடங்கள் உள்ளன.

சில நேரங்களில் இருவருக்கு இடையில ஏற்படும் கருத்து முரண்பாட்டின் போது கோபத்தின் வெளிப்பாடாக மரியாதையை குறைத்து "நீர்", "உமது", "உமக்கு" எனச் சுட்டுப் பெயர்கள் வடிவிலும் "இரும்", "வாரும்", "சொல்லும்" என வினைச் சொற்கள் வடிவிலும் பேச்சு வெளிப்படும் இடங்களும் உள்ளன.

### யாழ்ப்பாணத்து உறவுமுறைச் சொற்கள்

யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் புழங்கும் சொற்கள் பல தமிழகத்துச் சொற்பயன்பாடுகளிலிருந்து வேறுபட்டவையாக உள்ளன. பல அன்றாடப் பயன்பாட்டுச் சொற்களும் இவற்றுள் அடக்கம். ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை முறைகளையும் பண்பாட்டையும் பிரதிபலிப்பதாகக் கூறப்படும் உறவு முறைச் சொற்கள் யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் எப்படி அமைகின்றன என்பதைப் பார்க்கலாம்.

எழுத்துத் தமிழில் கணவன், மனைவி என்ற சொற்களுக்கு ஈடாக, யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் புருசன், பெண் சாதி என்ற சொற்கள் பயன்படுகின்றன. 1707 ஆம் ஆண்டில் தொகுக்கப்பட்ட தேசவழமைச் சட்டத்திலும் இச் சொற்களே கையாளப்பட்டுள்ளன.

பெற்றோரையும் பிள்ளைகளையும் கொண்ட தனிக் குடும்பம் ஒன்றில் உள்ள உறவுகள், தாய், தந்தை, ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் என்பவர்களாகும். இவர்களை அழைக்கப் பயன்படும் விளிச் சொற்களும் அவர்கள் பற்றிப் பிறருடன் பேசும் போது பயன்படுத்தும் குறிப்புச் சொற்களும் ஒரு பேச்சு மொழியின் அடிப்படையான சொற்களாகும்.

தற்காலத்தில் யாழ்ப்பாணத்துப் பிள்ளைகள் தந்தையை அப்பா என்றும் தாயை அம்மா என்றும் அழைக்கிறார்கள். இன்று வாழும் மூத்த தலைமுறையினரில் பலர், இவர்களை முறையே, அப்பு, ஆச்சி என அழைத்தனர். இடைக் காலத்தில் தந்தையை ஐயா என்று அழைக்கும் வழக்கமும் இருந்தது. அக்காலத்தில், பெற்றோரின் பெற்றோரை, பெத்தப்பு, பெத்தாச்சி, அம்மாச்சி, அப்பாச்சி, ஆச்சி என்றார்கள்.

இன்று அவர்கள் அம்மம்மா, அப்பம்மா, அம்மப்பா, அப்பப்பா, (சில வீடுகளில் தாத்தா, பாட்டி எனவும்) என அழைக்கப்படுகிறார்கள். இது போலவே பெற்றோரின் உடன் பிறந்த ஒத்தபாலாரும் சில பத்தாண்டுகளுக்கு முன் வரை, பெரியப்பு, சின்னப்பு, பெரியாச்சி, சின்னாச்சி, குஞ்சையா, குஞ்சம்மா என்றும் பின்னர் பெரியையா, சின்னையா என்றும் அழைக்கப்பட்டு, இன்று, பெரியப்பா, சித்தப்பா, பெரியம்மா, சின்னம்மா அல்லது சித்தி என்ற உறவுப் பெயரிட்டு அழைக்கப்படுகிறார்கள்.

பால் வேறுபாடின்றிப் பிள்ளைகளைக் குறிக்கும் போது, பிள்ளை என்ற சொல்லே பயன்படுகின்றது. ஆண் பிள்ளையை ஆம்பிளைப் பிள்ளை என்றும் பெண் பிள்ளையைப் பொம்பிளைப் பிள்ளை என்றும் குறிப்பிடுவது அங்குள்ள பேச்சுத் தமிழ் வழக்கு. ஆம்பிளை என்பது ஆண் பிள்ளை என்பதன் திரிபு. அதுபோலவே பொம்பிளை என்பது பெண் பிள்ளை என்பதன் திரிபு. எனினும் தற்காலத்தில் ஆம்பிளை என்பதும் பொம்பிளை என்பதும் ஆண், பெண் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டு வருவதால், பிள்ளைகளைக் குறிக்கும் போது, இன்னொரு பிள்ளை (ஆம்பிளைப் பிள்ளை) என்ற சொல்லையும் சேர்க்க வேண்டி ஏற்பட்டது.

உறவுச் சொற்களாக வழங்கும் போது, ஆண் பிள்ளையை, மகன் என்றும் பெண் பிள்ளையை மகள் என்றுமே வழங்குவர். யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில், இச்சொற்களை விளிச் சொற்களாகவும் பயன்படுத்தி வந்தாலும், பல குடும்பங்களில், ஆண் பிள்ளையைத் தம்பி என்றும் பெண் பிள்ளையைப் தங்கச்சி அல்லது பிள்ளை என்றும் அழைப்பது வழக்கம்.

பிள்ளைகள் தங்களுக்குள் பயன்படுத்திக் கொள்ளும் உறவு முறைச் சொற்கள் அண்ணன், அக்கா, தம்பி, தங்கச்சி என்பனவாகும். மேற் சொன்ன உறவுகள் ஒன்றுக்கு மேற்பட இருக்கும் போது, பெரிய, சின்ன, இளைய, ஆசை, சீனி போன்றவற்றில் பொருத்தமான ஒரு அடைமொழியைச் சேர்த்து, பெரியண்ணன், ஆசைத் தம்பி, சின்னக்கா என்றோ, அவர்களுடைய பெயரைச் சேர்த்து, சிவா அண்ணா, வாணியக்கா என்றோ வேறுபடுத்தி அழைப்பது வழக்கம்.

தந்தையின் உடன் பிறந்தாளை, அத்தை என்று அழைக்கும் வழக்கம் யாழ்ப்பாணத்தில் மிகவும் குறைவு. தந்தையோடு பிறந்த பெண்களையும் தாயோடு பிறந்த ஆண்களின் மனைவியரையும் மாமி என்றே அழைப்பது இவ்வூர் வழக்கம்.

எனினும், பழைய தலைமுறையினர், தாயோடு பிறந்த ஆணை அம்மான் என்றும் தந்தையுடன் பிறந்த பெண்ணின் கணவரை மாமா என்றும் குறிப்பிட்டனர். இன்று அம்மான் என்ற சொல் விடப்பட்டு, மாமா என்பதே இரு உறவுக்கும் பயன்படுகின்றது.

மனைவி கணவனை "இஞ்சாருங்கோ", அல்லது "இஞ்சாருங்கோப்பா" என்றும் கணவன் மனைவியை பெயரைச் சொல்லியோ அல்லது "இஞ்சாருமப்பா" என்றுமே அழைத்து வந்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரந்தனில்...

துள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கௌதாரிமுனைப் பகுதியைச் சேர்ந்த 56 வயதான நபர் பலியானதுடன் 34 வயதான நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பூநகரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## ஹெரோயினுடன்...

ஹெரோயின் போதைப்பொருளை கொள்வனவு செய்து கொண்டு செல்வதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கோண்டாவில் இருபாலை வீதிக்கு விரைந்த பொலிஸார், 5 கிராம் 465 மில்லிகிராம் ஹெரோயினுடன் நான்கு இளைஞர்களை கைது செய்துள்ளனர்.

இதேவேளை இவர்களிடம் இருந்து ஊசிகளையும் கைப்பற்றியுள்ளதுடன் குறித்த நால்வருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. (ம-7)

## காணி விடுவிப்பு...

யாழ்.மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட உயரதிகாரிகளுக்கும் இடையில் குறித்த விசேட சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

பலாலி இராணுவத் தலைமையலுவலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண இராணுவ கட்டளைத் தளபதி எம்சிபி விக்கிரம சிங்கவை யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் உள்ளிட்ட குழுவினர் சந்தித்து பேசினர்.

குறித்த சந்திப்பில் ஜனாதிபதியின் வடமாகாண மேலதிக செயலாளர் இளங்கோவன் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) கே.ஸ்ரீமோகனன், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவகங்கா சுதீஸ்னர் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

யாழ்.மாவட்டத்தில் இராணுவ வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (ம-7)

## முள்ளிவாய்க்...

எதிரான ஒரு தலைவரை கொண்டுவர வேண்டுமென்ற பிரசாரத்துடன் கடந்த 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், தமது கட்சி ஆதரவு வழங்கிய விடயத்தை அநுர குமார ஒப்புக்கொண்டார்.

“எமது நாட்டின் வரலாற்றில் அனைத்து அரசியலும் அடுத்தவர்களுக்கு எதிராக இருந்தது. 2005இல் மகிந்த தமிழர்களுக்கு எதிராக அதிகாரத்தை பெற்றுக்கொண்டார்.

அப்போது தமது ஆதரவை, மகிந்தவுக்கு வெளிப்படுத்திய மக்கள் விடுதலை முன்னணியின் சோமவன்ச அமரசிங்க, “தமது கட்சி போருக்கு அஞ்சவில்லை” எனவும், “போருக்கு அஞ்சினால் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது,” எனவும் தெரிவித்திருந்தார்.

2005ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ முதன்முறையாக ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியபோது, மக்கள் விடுதலை முன்னணி, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆதரவை வெளிப்படுத்தியதோடு அவருக்கு ஆதரவாக பிரசாரத்திலும் ஈடுபட்டது.

ஜூலை 2006இல் மகிந்த ராஜபக்ஷ யுத்தத்தை மீண்டும் ஆரம்பித்த பின்னர், மகிந்தவின் பெரும் இராணுவ வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாகவும் மக்கள் விடுதலை முன்னணி வாக்களித்திருந்தது.

2010ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ஷ தமிழர்களை தோற்கடித்த உத்வேகத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதாகவும் அநுர குமார திஸாநாயக்க இந்த செவ்வியில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தத் தேர்தலில் தமிழ் இனப்படுகொலைக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களில் மிகமுக்கியமானவரும், யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த இலங்கை இராணுவத் தளபதியும் அப்போதைய பொது வேட்பாளருமான சரத் பொன்சேகாவிற்கு, மக்கள் விடுதலை முன்னணி தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதாக வாக்குறுதியுடன், கடந்த 2005 ஆம் ஆண்டு [illegible] னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

மூன்றரை வருடங்களில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தார் என அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். (ம-7)

## மயங்கி...

சேர்ந்த ஞானசம்பந்தர் மில்ரன் (வயது-32) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

ஐந்து நாட்களுக்கு முன் மயங்கி விழுந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். (ம-7)

## பிரஜைகளின்...

தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதன்படி தவறான செயல்முறை, உள்நோக்கம் மற்றும் பேச்சு சுதந்திரத்தில் ஏற்படக்கூடிய தாக்கம் ஆகிய மூன்று அம்சங்களில் கவனம் செலுத்தி, இணைய பாதுகாப்பு சட்டம் குறித்து அவர் தீவிர கவலைகளை வெளிப்படுத்தினார்

குறித்த சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வரையறைகள் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான தாக்குதல்கள் போன்ற செயல்களை எதிர்த்துப் போராடும் நோக்கத்தில் உள்ளன, ஆனால் முறையான வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்த தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்று அவர் கவலை தெரிவித்தார்.

மேலும் சட்டத்தைத் திருத்துவதற்கான செயல்முறை நடந்து கொண்டிருக்கும் வேளையில், சட்டத்தின் சாத்தியமான தாக்கம் குறித்த தீர்வுகளைக் காணுமா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ம-7)

## மிள...

றுள்ளது. இதன்போது ஐந்து பேர் படுகாயம் அடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து அதில் இரண்டு பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருவதுடன் இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந் தேகநபர்கள் மூன்று பேரை கைது செய்துள்ளனர். ஏனையோரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அத்துடன் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து வாள், மிளகாய்த்தூள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.(ம-7,316)

## ரணிலுடன்...

பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தம்மை அரசியலுக்கு அறிமுகப்படுத்தியவர் ரணில் என்ற அடிப்படையில் தாம் அவருடன் பழகுவதாக பொன்சேகா ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியில் சேரும் எண்ணம் தமக்கு இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.02.20
சீட்டிழுப்பு இலக்கம் C222
B 1 7 3 9 7 0 B

தன நிதானய
திகதி - 2024.02.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1426
G 22 30 34 64 G
74808

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3638
சீட்டிழுப்பு திகதி 20.02.2024
U 32 61 63 76
U 28434
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.20
சீட்டிழுப்பு இலக்கம் 0705
மேடம் 09 28 39 43 மேடம்
42892 13

மஹஜன சம்பத
திகதி 2024/02/20
சீட்டிழுப்பு இலக்கம் 5396
X 7 9 8 1 5 4
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 20/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1744
N 21 09 54 61 68
01751

சசிரி
வெற்றி வாரம் 444
சீட்டிழுப்பு திகதி 2024.02.20
வெற்றி இலக்கங்கள் 21 | 23 | 37
07
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,876,880/-
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
20.02.2024 வெற்றி வாரம் 104 வர்ணம் சிவப்பு
V 7 5 1 9 0 9 Z
ரூ. 29,472,100.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2370 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.20 தினம் செவ்வாய்க்கிழமை
11 63 69 71 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 73,757,716/-
DLB

சனிதா
திகதி 2024.02.20 வெற்றி வாரம் 4531 வர்ணம் பச்சை
05 44 51 63 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,437,075.60
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4082 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.02.20 தினம் செவ்வாய்க்கிழமை
09 40 54 56
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,695,494.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2370 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.20 தினம் செவ்வாய்க்கிழமை
11 63 69 71 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 73,757,716/-
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2196
சீட்டிழுப்பு திகதி: 2024.02.20
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 92,780,412/-
18 26 47 61 J
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்
Village Hotel Jaffna Express
அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் → உரும்பிராய் → திருநெல்வேலி → யாழ்ப்பாணம் → கொழும்பு
கட்டணம் - 2700/=
(19118)
தொடர்புகளுக்கு
077 544 8503

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (19178)
076 825 7716 (ஆகாஸ்)

# பேச்சு சுதந்திரத்தை புரிந்து கொள்ளும் இடம் பாராளுமன்றமே

## சபாநாயகர் மகிந்த

(கொழும்பு)

"பேச்சு சுதந்திரத்தைப் புரிந்துகொள்ளும் இடம் பாராளுமன்றம் மட்டுமே" என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடவத்த, மஹாமாயா பெண்கள் கல்லூரியின்மாணவர்பாராளுமன்றத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் " பாராளுமன்ற செயற்பாட்டைப் பார்க்கும் போது பல்வேறு சந்தர்ப்பங்களில் உறுப்பினர்கள் என்னைக் குற்றம் சாட்டுவதை நீங்கள் காணலாம்.

பாராளுமன்றம் என்பது ஜனநாயகத்தின் இதயமாகும். பாராளுமன்றம் செயல்படவில்லை என்றால் நாட்டில் ஆட்சி இல்லை. சட்டவாக்கம் இல்லாமல் நீதித்துறை, நிறைவேற்று அதிகாரம் என்பவற்றுக்குத் தனித்து இயங்க முடியாது.

ஒரு நாட்டின் எதிர்காலம் குறித்து முடிவெடுப்பதில் நீதித்துறை, நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம் ஆகியன சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன.

ஜனநாயகம் இல்லையென்றால், நாளாந்தம் கொலைகள் நடக்கும். எந்தத் துறையினதும் கட்டுப்பாடின்றி இயங்காத நாடும் உருவாகும். அப்போது மக்கள் அந்த நாட்டில் இருக்க விரும்ப மாட்டார்கள். அந்த மக்கள் வேறு நாட்டிற்குச் சென்று அகதிகளாக வாழ முடிவு செய்வர். எனவே, மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது மற்றும் நாட்டின் பாதுகாப்பிற்காக பாடுபடுவது தொடர்பான சட்டங்களை இயற்றும் திறன் பாராளுமன்றத்துக்கே உள்ளது" இவ்வாறு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (ம-7)

# பொலிஸாரை தாக்கிய சீனப் பெண் கைது

(கொழும்பு)

வீசா இன்றி நாட்டில் தங்கியிருந்த சீனப் பெண் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்தச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரை தாக்கிய சீனப் பெண் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டதாக பேருவளை பொலிஸார் தெரிவித்தனர்.

பேருவளை மங்கள மாவத்தையில் வசிக்கும் 36 வயதுடைய சீனப் பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பேருவளை மங்கள வீதியில் உள்ள வீடொன்றில் சீனப் பெண் ஒருவர் செல்லுபடியான வீசா இன்றி தங்கியிருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள அங்கு சென்றதாகவும், அங்கு ஏற்பட்ட உரையாடலின் விளைவால் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு உள்ளான 2 பொலிஸ் உத்தியோகத்தர்களும் களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், சந்தேகநபரான பெண்ணை களுத்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல இந்திய சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
○ தோசை தயாரிப்பவர்
○ ரொட்டி தயாரிப்பவர்
○ சிற்றுண்டி தயாரிப்பவர் ஆண்/பெண்
○ உணவு பரிமாறுபவர் ஆண்/ பெண்
(19194)
070 569 6695, 070 664 7466

# தாதியர் வேலைவாய்ப்பிற்காக 236 பேர் இஸ்ரேல் பயணம்

தாதியர் வேலைவாய்ப்பிற்காக இவ்வாண்டின் முதல் 50 நாட்களில் 236 பேர் இஸ்ரேலுக்கு பயணித்துள்ளனர். இந்த நிலையில், இஸ்ரேலில் வேலைவாய்ப்புப் பெற்ற 149 பேருக்கான விமானப் பயணச்சீட்டுக்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன. இதில் 54 பேர் தாதியராகக் கடமையாற்றவுள்ளனர்.

இவர்கள் இன்றும் நாளையும் இஸ்ரேலுக்கு பயணிக்கவுள்ளனர். (ம-7)


விற்பனைக்கு
கெற்பேலியில் 13 பரப்பை உடைய தென்னங்காணி விற்பனைக்கு உண்டு. போக்குவரத்து வசதி உண்டு.
(19182)
076 674 9423

IELTS - 24.02.2024 New Batch ஆரம்பம்
இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (19193)

உயிரியல்
A/L 2024, 2025
தனிப்பட்ட, குழு வகுப்புக்கள்
அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும்.
தொடர்பு : (C-8383)
075 020 7880

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8388)

## மரண அறிவித்தல்



### கந்தையா இரத்தினவடிவேல் ( தங்க மாமா )

( ஓய்வுபெற்ற தொழிநுட்ப நிர்வாக அலுவலர், நில அளவைத் திணைக்களம் )

இலங்கை யாழ்ப்பாணம் வடமராட்சி வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா இரத்தினவடிவேல் (தங்க மாமா) (ஓய்வுபெற்ற தொழிநுட்ட நிர்வாக அலுவலர், நிலஅளவைத் திணைக்களம்) அவர்கள் கடந்த 17.02.2024 (சனிக்கிழமை) அன்று இந்தியா, சென்னையில் இயற்கை எய்தினார் என்பதனை எல்லோருக்கும் மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் கந்தையா - இராசம்மா கந்தையா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சண்முகம் தம்பித்துரை - இராசம்மா தம்பித்துரை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவமணி கந்தசாமி, சரசுவதி சிவச்செல்வம், ஆ.க.நடராசா, ஆ.க. சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புத்தம்பியும் மங்களேசுவரி இரத்தினவடிவேலின் அன்புக் கணவரும் கீதாஞ்சலி சண்முகநாதன், வானதி கந்தரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பொன்னையா சண்முகநாதன், இராசதுரை கந்தரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அர்ஜூன், அருண், ஐசுவர்யா, அம்ரித் ஆகியோரின் அன்புப் பேரனும் இந்திராதேவி அரியரெத்தினம், த.குமாரசிங்கம், த.நவரெத்தினசிங்கம் ஆகியோரது அத்தானும், தம்பையா அரியரெத்தினத்தின் அன்புச் சகலனும், காலஞ்சென்ற சி.கந்தசாமி, சி.சிவச்செல்வம், க.கமலாதேவி, த.தனபாலசிங்கம், த.பரராசசிங்கம் ஆகியோரதும் சி. சந்தானலட்சுமியினதும் மைத்துனரும் காலஞ்சென்ற த.தாமரைவதனி, ப.உரோகிணி ஆகியோரதும் கு.கனகாம்பிகை, ந.ஒட்றி ஆகியோரதும் உடன்பிறவாச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (21.02.2024) புதன்கிழமை சென்னையில் நடைபெறும். இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(19187)

வேலைவாய்ப்பு
● உற்பத்திப் பொருட்களை யாழ் மாவட்டத்தில் சந்தைப்படுத்தல் செய்வதற்கு இத்துறையில் அனுபவமுள்ள, ஆர்வமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் (Sales Reps) தேவை.
● உற்பத்தி நிறுவனத்திற்கு நிர்வாக அதிகாரி (Administration officer)பணிநிலைக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.
(தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் சிறந்த தொடர்பாடல் திறன் கூடுதல் தகுதியாகக் கொள்ளப்படும்.)
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (19192)
தொடர்புகளிற்கு : 076 668 6054
whatsapp இற்கு விண்ணப்பங்களை அனுப்பவும்

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்

### ஞானசம்பந்தர் மில்ரன்



தோற்றம் 18.02.1992 | மறைவு 20.02.2024

அவர்கள் நேற்று 20.02.2024 அன்று இறைபதமடைந்து விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்...
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

(19186)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.197, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org